DUMBA NOVEL - TAMIL FORTNIGHTLY DEC.16, 2010. Registered with the Registrar of News Paper India No: 53775/92
REGD No. TN/CH(C)/159/09-11 LICENCED TO POST WITHOUT PRE-PAYMENT - W.P.P. 230/2009 - 11

ஜனவரி 2011 - கடைகளில்...








# மாறியது நெஞ்சம்

முத்துலட்சுமி ராகவன்

## 1

ஒரு நொடி... அந்த இடத்தை விட்டு ஓடிப்போய் விடவாமா என்று நினைத்தான் அர்ஜுன். ஆனால் பக்கத்தில் மீசையை முறுக்கிக் கொண்டு அமர்ந்திருந்த வேதாச்சலத்தைப் பார்த்ததும் அடங்கி உட்கார்ந்தான்.

'பெண் பார்க்க என்று கூப்பிட்டுக் கொண்டு வந்துவிட்டு... இப்படி பேயைக் காட்டுகிறார்களே...!'

அவனுக்கு ஆற்றாமையாக இருந்தது. ஆனால் அவன் முன்னால் விரிக்கப்பட்டிருந்த புதிய பவானி ஜமுக்காளத்தில் அமர்ந்து வீணை வாசிக்கத் தயாராகிக் கொண்டிருந்த தர்ஷினி ஒன்றும் பேயைப் போல் இருக்கவில்லை.

ஒல்லியாய்... உயரமாய்... அழகான நீண்ட பின்னலோடு... அம்சமான பெரிய கருவிழிகளோடு... அற்புதமான பேரழகியாய் இருந்தாள்.

வீணையை சுருதி ஏற்றுவதுபோல் தலையைக் குனிந்து கொண்டிருந்தவளின் மனம், அர்ஜுனுக்குக் குறையாத அளவில் குமுறிக் கொண்டிருந்தது.

'ஹூம்... போயும்... போயும்... இந்த மூஞ்சிக்காகவா... மெனக்கெட்டு இவ்வளவு தூரம் அலங்கரித்துக் கொண்டேன்.'

விட்டால் அவள் வீணையால் அர்ஜுனின் தலையில் இரண்டு போடு போட்டு ஓட... ஓட... விரட்டியிருப்பாள்.

பெற்றவர்களை நினைத்து பல்லைக் கடித்துக் கொண்டு சபையில் அமர்ந்திருந்தாள்.

''எங்க தர்ஷினி பாடினால்... அந்த கலைவாணியே நேரில் வந்து பாடுவது போல இருக்கும்...'' தர்ஷிணியின் அம்மா சரோஜா பெருமையுடன் கூறினாள்.

''என்னது... களவாணியா...?'' வேண்டுமென்றே சந்தேகம் கேட்டான் அர்ஜுன்.

'பெண் பார்க்க வந்திருக்கும் தெனாவெட்டா...?' யாரும் அறியாமல் விழியுயர்த்தி, தன் வேல் விழியால் அவனை 'வெட்டவா... இல்லை, குத்தவா...?' என்று ஒரு பார்வை பார்த்து வைத்தாள் தர்ஷினி.

அவளது முறைப்பை இனம் கண்டு கொண்ட அர்ஜுனின் நெஞ்சில்

வெற்றிப் பெருமிதம் படர்ந்தது.

'டென்ஷன் ஆகிறாயாடி... உன்னை டென்ஷன் படுத்துவது என்றால் எனக்கு அல்வா சாப்பிடுவது போல... என் முன்னால் அடக்க ஒடுக்கமாக உட்கார்ந்து போஸ் கொடுக்கிறாயா...? உன் சுயரூபம் என்னைப் பெற்றவர்களுக்குத்தான் தெரியாது. எனக்கு நல்லாத் தெரியுமே...'

மகனை முறைத்தார் வேதாச்சலம். அவனது காதருகே சரிந்து மிரட்டும் தொனியில் கூறினார்.

''டேய்... வாயை வைத்துக் கொண்டு சும்மாயிரு.''

''இல்லப்பா... எனக்கு அப்படித்தான் காதில் விழுந்தது.''

''விழும்... விழும்... ஞான சூன்யம். அப்படியே உன் அம்மாவைக் கொண்டு பிறந்து தொலைச்சிருக்க... சங்கீதம்ன்னா... கிலோ என்ன விலைன்னு கேட்பாள் அவள்... நீ அவள் பெற்ற பிள்ளைதானே! வேறு எப்படியிருப்பாய்?''

பெண் பார்க்க வேதாச்சலம் போன போது அர்ஜுனின் அம்மா தமிழ்செல்வி கையில் வீணையோடு வந்து உட்கார்ந்தாளாம்... வீணை இசையைக் கண்மூடி ரசித்த வேதாச்சலம், அந்த இசையில் கரைப்பட்டு அந்த இடத்திலேயே பெண்ணைப் பிடித்திருக்கிறது என்று சொல்லி விட்டாராம். திருமணம் முடிந்து, தேநிலவும் முடிந்து, அர்ஜுன் தமிழ்செல்வியின் வயிற்றில் ஆறுமாத கருவாக இருந்த போது, மனைவியை வீணை வாசிக்கச் சொல்லிக் கேட்டாராம் வேதாச்சலம். அவள் திருதிருவென்று விழித்தாளாம்.

''அப்புறம்தாண்டா மகனே தெரிந்தது.... அவள் வெறுமனே வீணையை வைத்துக்கிட்டு போஸ் கொடுத்துக்கிட்டு உட்கார்ந்திருக்கிறாள். பின்னால்... டேப்பில் வீணையின் மியூஸிக்கை போட்டு விட்டிருக்கிறார்கள். இது தெரியாமல் ஏமாந்த சோணகிரியாய் நான், தலையைத் தலையை ஆட்டி, இவளைக் கல்யாணமும் பண்ணிக் கொண்டேன். அடுத்து அவளுடைய அப்பா வீட்டிற்கு விரட்டி விடலாமென்றால், நீ வயிற்றில் இருக்கிறாய். அப்புறமென்ன... என் சங்கீதக் கனவு காற்றோடு போச்சு...''

வேதாச்சலம் அடிக்கடி கூறும் நிகழ்வு இது. அவரை எதிர்த்துப் பேசினால்... அந்தச் சபையிலேயே அர்ஜுனின் அம்மா தமிழ்செல்வி வீணை வாசித்த கதையை அம்பலப்படுத்தி விடுவார் என்பதால் அர்ஜுன் வாயை இறுக மூடிக் கொண்டான்.



''மாப்பிள்ளை என்ன சொல்கிறாரு...?'' தர்ஷினியின் அப்பா கிருஷ்ணன் வினவினார்.

''இல்லை... பொண்ணு வீணை மட்டும்தான் வாசிக்குமா... இல்லை பாடவும் தெரியுமான்னு கேட்கிறான்.''

''பாட்டும் பாடுவாளே.... எங்க தர்ஷினி வாயைத் திறந்து பாடினால் குயில் பாடுவது போலவே இருக்கும்.''

'என்ன ஒரு பில்ட் அப்... இவள் வாயைத் திறந்து பாடினால் எனக்கு கோட்டான் பாடுவது போலவே இருக்கும்.' எரிச்சலுடன் முகத்தை திருப்பிக் கொண்டான் அர்ஜுன்.

வீணையை ஸ்வரம் ஏற்றிக் கொண்டிருந்த தர்ஷினியின் காதோரம் கிசுகிசுத்தாள் அவளது பெரியம்மாவின் பெண் ரமா.

''ஏய்... நீ கொடுத்து வைத்தவளடி. மாப்பிள்ளை ஹீரோ போல ஜம்மென்று இருக்கிறார். யு ஆர் ஸோ லக்கி.''

'இவனா ஹீரோ... சரியான வில்லன் இவன்...' தர்ஷினி தன் மனதின் கடுப்பு முகத்தில் தெரியாமல் மறைத்துக் கொண்டாள்.

அவள் மனம் கடுப்பதுபோல... அர்ஜுன் வில்லன் போலத் தோற்றமளிக்கவில்லை. ஆறடி உயரத்தில் கம்பீரமாய் - அளவான மீசையுடன் - எந்தப் பெண்ணையும் வசீகரிக்கும் தோற்றத்துடன் இருந்தான்.

பெண் பார்க்கவென்று வந்திருந்தவன் பெண்ணை விட்டுவிட்டு அவளின் பெரியம்மா பெண் ரமாவை 'சைட்' அடித்துக் கொண்டு இருந்தான்.

அதுவும் தர்ஷினி பார்க்கும் போது இன்னும் அதிகமாக ரமாவை சைட் அடித்தான்.

அவன் எதிர்பார்த்தது போலவே தர்ஷினியின் முகம் மாறியது. அவன் விழிகள் அவளிடம் சவால் விட்டன.

'உன்னைப் போய் எவன் பார்ப்பான்...?' அவன் மனதிற்குள் பொறுமிக் கொண்டிருந்த போது...

'உன் புத்தி இப்படித்தானேடா போகும்...' என்று அவள் மனதிற்குள் பொறுமிக் கொண்டிருந்தாள்.

ஒருவழியாய் வீணையில் ஸ்வரம் கூட்டி பாட ஆரம்பித்தாள் தர்ஷினி.

**''அலைபாயுதே... கண்ணா...**
**என் மனம்... மிக... அலைபாயுதே...''**

உண்மையில் அவளுடைய மனம் அலைகடலாய் ஆர்ப்பரித்துக்

கொண்டுதான் இருந்தது. அவள் பாடிக் கொண்டிருக்கும்போது மற்றவர் அறியாமல் அவன் செய்த மௌன சேஷ்டைகள் அவளை மிகவும் பாதித்தன. போதாக் குறைக்கு அவள் பார்வையை உணர்ந்தவன் காலமேல கால் போட்டுக் கொண்டு சோபாவில் சாய்ந்து அமர்ந்து கொண்டான்.

'இவன் பெரிய மகாராஜா... சோபாவில் உட்கார்ந்துக்குவான்... நான் சேடிப் பெண் போல... தரையில் உட்கார்ந்து இவன் கேட்டு மகிழ வீணை வாசிக்க வேண்டுமா...?'

அவள் மனம் முரண்டியது. இந்தப் 'பெண் பார்க்கும் வைபவ'த்தைக் கண்டுபிடித்த மகாராசனைக் கண்டால்... சல்லடையாக்கி விடும் கொலைவெறியுடன் அவள் கண்மூடிக் கொண்டாள்.

எல்லோரும் அவள், பாட்டில் மூழ்கி கண்மூடிக் கொண்டாள் என்று நினைத்துக் கொண்டார்கள். அர்ஜுனுக்கு மட்டுமே தெரியும் - அவள் அவனது முகத்தைப் பார்க்க சகிக்காமல் கண்மூடிக் கொண்டு வீணை வாசிக்கிறாள் என்பது..

இப்படியொரு பெண் பார்க்கும் படலம் வேறு எங்கும் நடந்திருக்குமா? என்று நினைத்து தலையில் கை வைத்துக் கொண்டான் அவன்.

''ஆஹா... அற்புதம்... பேஷ்... பேஷ்... ரொம்ப நன்னாயிருக்கு...'' என்று மகிழ்ந்து போனார் வேதாசலம்.

'இவர் எதைச் சொல்கிறார்...?' என்று குழம்பிப் போனான் அர்ஜுன்.

''என்னப்பா... காபி குடித்து முடித்து எவ்வளவு நேரமாகி விட்டது... இப்போது போய் காபியை விழுந்து, விழுந்து பாராட்டுகிறீங்களே...'' என்று தகப்பனாரைப் பார்த்து கேட்டு வைத்தான் அவன்.

வேதாச்சலம் நெற்றிக் கண்ணைத் திறக்காத குறையாய் அவனைப் பார்வையிலேயே எரித்தார்.

''ஞான சூனியம்... ஞான சூனியம்... நீயும் உன் அம்மாவைப் போல் திண்பதிலேயே குறியாய் இரு... அந்தப் பொண்ணு வீணை வாசிக்கிறதைக் கேட்டியாடா...?''

'நான் எங்கே கேட்டேன்...?'

''அப்படியே சாட்சாத்... அந்த சரஸ்வதியே வந்து வீணை வாசித்தது போல இருந்தது.''

'சரஸ்வதியை நீங்க நேரில் பார்த்திருக்கிறீங்களா...?'

''இப்படியொரு பெண் உனக்கு மனைவியா கிடைக்க நீ போன



ஜென்மத்தில் புண்ணியம் செய்திருக்க வேண்டும்.''

'போங்கப்பா... நீங்க வேற... பாவம் செய்திருக்க வேண்டும். அது புரியாமல் பேசிகிட்டு...'

தர்ஷினி 'வீணை வாசித்தேன். என் வேலை முடிந்தது' என்பது போல எழுந்து வீட்டிற்குள் சென்று விட்டாள்.

அர்ஜுன்.... 'அப்பாடி...' என்று நிம்மதிப் பெருமூச்சு விட்டான்.

''அப்புறம்... சம்பந்தி... நாங்க கிளம்புகிறோம். பெண்ணை எங்களுக்கு ரொம்ப பிடித்திருக்கு. அடுத்த வாரம் புதன்கிழமை நாள் நல்லாயிருக்கு. அன்றைக்கே நிச்சயதார்த்தம் நடத்தி விடலாம். வரும் முகூர்த்தத்தில் கல்யாணத்தை வைத்து விடலாம்.''

வேதாச்சலம் 'கிளம்புகிறோம்' என்று சொன்னதும் படுஉற்சாகமாய் எழுந்து நின்ற அர்ஜுன்... அடுத்து அவர் கூறிய வார்த்தைகளைக் கேட்டதும் பேயறைந்தவன் போல் ஆனான்.

''அப்பா...'' என்று ஏறக்குறைய அலறியவனை வேதாச்சலம் விழி மிரட்டலால் அடக்கினார்.

பெண்ணைப் பெற்ற கிருஷ்ணனுக்கு வாயெல்லாம் பல்லானது.

''ரொம்ப சந்தோஷம் சம்பந்தி... நீங்க சொன்னால் மறுபேச்சு ஏது? உங்க இஷ்டப்படியே எல்லாத்தையும் நடத்தி விடுவோம்...'' என்று கை கூப்பினார்.

எப்படி காரில் ஏறினான்... எப்படி வீட்டிற்குள் வந்தான் என்று அறியாதவனாக... பொம்மை போல் வந்தான் அர்ஜுன்.

அவனது நிலையைக் கண்டு பயந்து போன தமிழ்செல்வி, அவன் முகத்தில் தண்ணீர் அடிக்காத குறையாக உலுக்கி... அவனை தன் நிலைக்கு கொண்டு வந்தாள்.

''டேய்... அர்ஜுன்... ஏண்டா இப்படி முழிக்கறே... ஐயோ... என் பிள்ளைய எந்தக் காத்து கருப்போ... பயமுறுத்திருச்சே...''

அன்னையின் அழுகுரல் கேட்டுத் தன் நிலைக்கு வந்த அர்ஜுன் தன்னை பயமுறுத்திய காத்து... கருப்பை நினைத்து உடல் சிலிர்த்தான்.

'ஐயோ... அம்மா... அதைத்தானே பெண்ணுன்னு காட்டி விட்டு கூப்பிட்டுக் கொண்டு வந்திருக்கீங்க. பத்தாக்குறைக்கு அப்பா... அந்த பிசாசை வாழ்நாள் முழுவதும் என் தலையில கட்டப் பார்க்கிறாரே...'

அவன் அவசரமாய் வேதாச்சலத்தைப் பார்த்தான்.

''அப்பா... எனக்கு அந்தப் பெண்ணைப் பிடிக்கலை...''

''ஏன் பிடிக்கலை...? அவளென்ன பின்னாலே டேப்-ரிகார்டரை ஒளித்து வைத்துக்கிட்டு வாயை அசைத்து ஏமாற்றினாளா?''

மகனுக்கு பரிந்து பேச வாயைத் திறந்த தமிழ்செல்வி வாயை இறுக மூடிக் கொண்டாள்.

தகப்பனாரின் தந்திரம் புரிந்து கோபமடைந்தான் அர்ஜுன்.

''அப்பா இது அநியாயம்...''

''எதுடா அநியாயம்...? என் அப்பா... ஒன்றுமில்லாத ஓட்டாண்டி வீட்டில ஆறு பவுன் நகையோடு ஒரு ஞானசூன்யத்தை என் தலையில் கட்டி வைத்ததைப் போலவா... நான் உனக்கு கட்டி வைக்கப் பார்க்கிறேன்? கிளி போல் அழகாக இருக்கிறாள். குயில் போல பாடுகிறாள். மயில் போல நடக்கிறாள்...''

''அப்பா... இந்தப் பறவைகள் இனமெல்லாம் எனக்கு வேண்டாம். மனிதப் பிறவியே எனக்குப் போதும்.''

அர்ஜுன் எரிந்து விழுந்தான்.

## 2

**தா**ன் பார்த்து வந்தது மனிதப் பிறவியல்ல என்று தகப்பனாருக்கு உணர்த்த முயன்று தோற்றுப் போனான் அர்ஜுன்.

''இதோ பார் அர்ஜுன்... நான் வாக்குத் தவறாத பரம்பரையில் பிறந்தவன்..''

''நானும் உங்கள் பரம்பரைதானேப்பா...''

''அந்த நினைவு உன் நெஞ்சில் இருக்கிறதா?''

''அதிலென்ன உங்களுக்கு அவ்வளவு சந்தேகம்?''

''இருந்தால் இப்படிப் பேசுவாயா...? நிறைந்த சபையில் அந்த மனிதரிடம், 'உன் பெண்ணை எங்களுக்குப் பிடித்திருக்கிறது. அடுத்த வாரம் நிச்சயதார்த்தம். வரும் முகூர்த்தத்தில் கல்யாணம்' என்று வாக்குக் கொடுத்து விட்டு வந்திருக்கிறேன். நீயானால் பெண்ணைப் பிடிக்கவில்லைன்னு கதை சொல்கிற...''

''அப்பா... இது கதையில்லே....''

''அது என்னவாக வேண்டுமானாலும் இருக்கட்டும். நான் வாக்குத் தவறமாட்டேன்.''



''நான் எனக்குப் பிடிக்காத பெண்ணின் கழுத்தில் தாலி கட்ட மாட்டேன்.''

''உன் முடிவு அதுவாக இருந்தால்... நீ என் முடிவையும் கேட்டுக் கொள்.''

''என்ன...?''

''நான் இந்த வீட்டில் இருக்க மாட்டேன். வீட்டை விட்டு வெளியேறி... கண்காணாமல் போய் விடுவேன்.''

தமிழ்செல்வி பதைத்துப் போய் வாய்பொத்திக் கொண்டாள். அர்ஜுன் அதிர்ந்து போய் நின்றான்.

'என்ன மாதிரியான மிரட்டல் இது...?'

மகனின் கையைப் பிடித்துக் கொண்டு தமிழ்செல்வி கெஞ்ச ஆரம்பித்து விட்டாள்.

''டேய் அர்ஜுன்... காலம் போன கடைசியில் எங்க ரெண்டு பேரையும் பிரிச்சுராதேடா... பேசாமல் அந்தப் பெண்ணைக் கட்டிக்கடா... அப்பா சொல்வது போல... அந்தப் பெண்ணுக்கு என்னடா குறை...?''

அர்ஜுன் ஊமையாகிப் போனான். அவனுடைய போராட்டத்திற்கு சளைக்காதவளாய் தர்ஷிணியும்... தன் வீட்டில் போராடிக் கொண்டிருந்தாள்.

''**அ**ம்மா... எனக்கு இந்தக் கல்யாணத்தில் விருப்பமில்லை.''

''அறிவுடன்தான் பேசுகிறாயா...?''

''கொஞ்ச நேரத்திற்கு முன்னால் நீதானே என்னை அந்த ஜென்மங்களிடம் சரஸ்வதின்னு சொல்லிக் கொண்டிருந்தாய்...?''

''அடித்துப் பல்லைக் கழற்றி விடுவேன். யாரைப் பார்த்து ஜென்மங்கள்னு சொல்கிறாய்...? இதே வாய்தானே நாளைக்கு அவர்கள் வீட்டில் வாழப் போகும் போதும் நீளும்...''

''அம்மா... அவனைக் கல்யாணம் பண்ணிக்க விருப்பமில்லைன்னு கராடியாய் கத்திக்கிட்டு இருக்கேன். நீ என்னடான்னா நாளைக்கு அவன் வீட்டில் நான் போய் வாழப் போவதைப் பற்றிப் பேசிக் கொண்டிருக்க...''

''நீ இன்னும் சின்னக் குழந்தையில்லை தர்ஷிணி...''

''அதனால்தானே பெண் பார்க்க வந்தாங்க.''

''இந்த புத்திசாலித்தனத்தை உன் வாழ்க்கையைப் பற்றி யோசிப்பதில் கொஞ்சம் காட்டேன்.''

''எல்லாம் யோசித்து விட்டுத்தான் சொல்கிறேன்ம்மா...''

''மாப்பிள்ளை ஸ்டேட் கவர்ண்மெண்டில் பெரிய பதவியில் இருக்கிறார். கார் இருக்கு. பங்களா இருக்கு. வீட்டுக்கு ஒரே பிள்ளை. கிராமத்தில நிலபுலன் இருக்கு. இதைப்போல பணக்கார இடத்து சம்பந்தம் - நமக்கு தலைகீழாக நின்னாலும் கிடைக்காதும்மா...''

''எனக்கு பணக்கார இடம் வேண்டாம்...''

''என்டி இப்படி வறட்டுப் பிடிவாதம் பிடிக்கறே...? மாப்பிள்ளைக்கு என்னடி குறை? உன் பெரியம்மா அவருடைய வீட்டு அட்ராஸை நோண்டி... நோண்டிக் கேட்டாள். உன் பெரியம்மா பெண் ரமா விட்ட பெருமூச்சில் இந்த வீடு பூராவும் அனல் காற்றா இருக்கு. உன்னைப் பெண் பார்க்க வந்த மாப்பிள்ளையை வெட்கமில்லாமல் விழுங்கி விடுவது போல இவள் பார்க்கிறாள்.''

''பேசாமல் பெரியம்மா வீட்டுடன் இதுகளைச் சேகரித்து விட்டு விடும்மா... உனக்கு கோடி புண்ணியமாகப் போய் விடும். நானும் பிழைத்துக் கொள்வேன்.''

''ஆனால் நான் விஷத்தைக் குடித்து விடுவேனே...!''

''அம்மா...''

''கனவில்கூட நினைக்காத சம்பந்தம் நம்மைத் தேடி வந்திருக்கு. அதை நீ கலைக்கப் பார்த்தால்... என் உயிர்... என் உடம்பில நிற்காது. உன் அப்பாவுடைய சம்பளத்தில் வாயைக் கட்டி... வயிற்றைக் கட்டி... குடும்பம் நடத்தி... உன்னையும் உன் தம்பியையும் வளர்க்க நான் பட்டபாடு உனக்குத் தெரியுமாடி? வேறு இடமாக இருந்தால்.. வரதட்சணையும்... கிலோ கணக்கில் நகையும் கேட்பாங்க. இவங்க தன்மையாய் 'உங்க பெண்ணுக்கு என்ன செய்வதாக இருக்கீங்களோ... அதைச் செய்யுங்க. போதும்'ன்னு சொல்லிவிட்டுப் போறாங்க. உன் அப்பாவின் சம்பளத்தில் லோன் போட்டு, இந்தக் கையகல வீடு ஒன்றைக் கட்டி வைத்திருக்கிறோம். வேறு சொத்து எதுவும் நமக்கு இல்லை. புரிந்து நடந்து கொள். உனக்கே எல்லாவற்றையும் விற்று செய்து விட்டால், நாளைக்கு உன் தம்பிக்கு என்ன மிஞ்சும்...? உனக்காக இல்லாவிட்டாலும் உன் தம்பியின் முகத்திற்காக இந்தக் கல்யாணத்திற்கு சம்மதி தர்ஷிணி.''

சரோஜா கைகூப்பினாள். தர்ஷிணி உதட்டைக் கடித்துக் கொண்டு கண்ணீரை அடக்கிக் கொண்டாள். பிடிக்காத திருமணத்தைப் பண்ணிக் கொள்ள நேர்பவர்களுக்குத் தெரியும்... அந்த வேதனை!



அர்ஜுனின் வெறுப்பையும், தர்ஷிணியின் வேதனையையும் சட்டை பண்ணாமல் மறுவார புதன்கிழமை வந்தது. நிச்சயதார்த்தமும் நடந்தது.

அழகான மயில கழுத்து நிற பட்டுச் சேலையில்... அழகு தேவதையாய் அடிமேல் அடி எடுத்து வைத்து வந்து சபையில் அமர்ந்தாள் தர்ஷிணி.

அவளை கலவையும், மண்ணையும் பார்ப்பது போல பார்த்துக் கொண்டு... 'யாருக்கு வந்த விருந்தோ...!' என்று அமர்ந்திருந்தான் அர்ஜுன்.

ரமா... இங்கும் அங்கும் நடந்து அர்ஜுனின் கவனத்தைக் கவர முயல்வதைப் பார்த்து சரோஜா பல்லைக் கடிக்க... தர்ஷிணி 'எனக்கென்ன...' என்று சம்பந்தமில்லாதவள் போல தலையைக் குனிந்து கொண்டாள்.

நிச்சயதார்த்த பத்திரிகை வாசிக்கப்பட்டது. திருமணம் உறுதி செய்யப்பட்டது. திருமணம் செய்து கொள்ள வேண்டிய மாப்பிள்ளையும், மணமகளும் விட்டேற்றியாய் இருக்க - இருவீட்டையும் சேர்ந்தவர்கள்.. இறக்கை கட்டிக் கொண்டு உற்சாகமாய் ஓடி... ஆடி... வேலை செய்தனர்.

திருமண நாளும் வந்தது. மணமேடையில் எரியும் அக்கினியைப் பார்த்துக் கொண்டே அர்ஜுன் அமர்ந்திருக்க... தன் கால் கட்டை விரலைப் பார்த்துக் கொண்டு தர்ஷிணி உட்கார்ந்து இருந்தாள்.

மறந்தும் மணமக்கள் இருவரும் ஒருவரை ஒருவர் பார்த்துக் கொள்ளவில்லை.

''மாங்கல்யம்... தந்துனானே...!'' என்று அய்யர் மந்திரம் ஓத... கெட்டிமேளம் முழங்க... நாதஸ்வரம் ஒலிக்க... தாலியை எடுத்து... 'விதியே...' என்று தர்ஷிணியின் கழுத்தில் கட்டினான் அர்ஜுன்.

வேறு வழியில்லாதவளாய் கழுத்தை நீட்டினாள் தர்ஷிணி.

மாலையில் திருமண வரவேற்பு ஒரு ஐந்து நட்சத்திர ஹோட்டலில் நடந்தது.

கருநீல கோட்சூட்டில் இருந்த அர்ஜுன்... தன் நண்பர்களுடன் பேசுவது போல் விலகிச் சென்றுவிட..... தர்ஷிணி தன் தோழிகளுடன் சுவாரஸ்யமாய் பேசச் சென்றுவிட..... இரு வீட்டாருக்கும் மணமக்களை இணைத்து வரவேற்பு மேடையில் நிற்க வைப்பதே முழுநேர வேலையாகிப் போனது. ...ஆசைகளோடும் கனவுகளோடும்...

''பாவம் அந்தப் பெண்... எத்தனை ஆசைகளோடும் கனவுகளோடும்... உன் மகனுக்கு கழுத்தை நீட்டியிருக்கும்...? இவனுக்கு கொஞ்சமாவது மனசாட்சி இருக்கிறதா... அந்தப் பெண்ணின் பக்கத்தில் நிற்கக் கூடப்

பிடிக்காமல் 'கடனே...'ன்னு நிற்கிறான் பார்.'' வேதாச்சலம் தமிழ்செல்வியை வறுத்தெடுத்தார்.

''எங்க... மாப்பிள்ளை எவ்வளவு ஆசைஆசையாய் இவளைக் கல்யாணம் பண்ணியிருப்பார்? இந்த பிடிவாதக்காரி... அவர் பக்கத்தில் அடங்கி நிற்கிறாளான்னு பாருங்க. முகத்தை ஒரு முழ நீளத்திற்கு தொங்கப்போட்டுக் கொண்டு இப்படி நிற்கிறாளே...'' கிருஷ்ணனிடம் அங்கலாய்த்தாள் சரோஜா.

இரு வீட்டாருக்குமே - அவர்கள் இருவருக்குமே ஒருவரையொருவர் பிடிக்காது என்பது தெரியாது.

அர்ஜுனுக்குத்தான் தர்ஷிணியைப் பிடிக்கவில்லையென்று வேதாச்சலமும் தமிழ்செல்வியும் நினைத்திருக்க... தர்ஷிணிக்குத்தான் அர்ஜுனைப் பிடிக்கவில்லையென்று கிருஷ்ணனும் சரோஜாவும் நினைத்துக் கொண்டிருந்தார்கள்.

அர்ஜுனுக்கும், தர்ஷிணிக்கும் இடையே பெரும் பகை இருப்பது இருவீட்டாருக்குமே தெரியாது.

அது... இன்று நேற்று முளைத்த பகையல்ல. அர்ஜுனும், தர்ஷிணியும் எல்.கே.ஜி. படிக்கும் குழந்தைகளாக இருக்கும் போதே தோன்றியது.

அர்ஜுனின் பக்கத்தில் இருந்த மாணவன் தர்ஷிணியின் நோட்டை எடுத்துவிட... அதை அர்ஜுன் எடுத்து விட்டதாக வகுப்பு ஆசிரியையிடம் புகார் சொன்னாள் தர்ஷிணி.

விளைவு...! ஆசிரியையின் கையில் இருந்த பிரம்பால் அடிவாங்கினான் அர்ஜுன்.

மறுநாள் தர்ஷிணி உட்காரும் இடத்தில் ஆணி இருந்தது. தெரியாமல் உட்கார்ந்த தர்ஷிணி... ஆஸ்பத்திரிக்குப் போனாள்.

அன்றிலிருந்து... அந்தப் பள்ளியின் இறுதியாண்டு வரை இருவரும் ஒரே வகுப்பில் படித்தார்கள். ஒருவருக்கு ஒருவர் மாறாத எதிரிகளாக இருந்தார்கள்.

அர்ஜுனைப் பற்றி தர்ஷிணி வீட்டில் பேசியதில்லை. தர்ஷிணி என்றொரு ஜீவன் இருப்பதாக அர்ஜுனும் நினைத்துப் பார்த்து வீட்டில் சொன்னதில்லை.

ஆயிரக்கணக்கில் மாணவ, மாணவிகள் படிக்கும் பிரசித்தி பெற்ற அந்தப் பள்ளியின் வாசல் கேட்டில் நின்று தங்களின் பிள்ளைகளை அழைத்துக் கொண்டு போகும் இருவரின் பெற்றோர்களும்... ஒருவரை



யொருவர் அதுவரை பார்த்துக் கொண்டதே இல்லை.

மேல்நிலைப் பள்ளிப் படிப்பு முடிந்ததும் இருவரும் வேறு வேறு பாதையில் பிரிந்து போனார்கள்.

இன்று வாழ்வில் உயர்ந்த நிலையில் இருக்கும் அர்ஜுன், வேலையில்லாத பட்டதாரியான தர்ஷிணியைத் திருமணம் செய்து கொள்ள வேண்டிய கட்டாயத்திற்கு ஆளாகி விட்டான்.

பள்ளியில் அவள் முகத்தைப் பார்க்க நேர்ந்தாலே அர்ஜுனின் முகம் வெறுப்பில் சுருங்கி விடும். அவனைவிட அலட்சியமாக அவள் அவனைப் பார்ப்பாள்.

இனி காலம் முழுவதும் அவர்கள் ஒருவர் முகத்தை ஒருவர் பார்த்துத்தான் ஆக வேண்டும் என்று இறைவன் விதித்து விட்டான்.

திருமண பந்தத்தில் சிக்கிக் கொண்ட அர்ஜுனும், தர்ஷிணியும் அதை விலங்காக நினைத்தனர்.

## 3

ஏசியின் குளிர் அறையில் நிறைந்திருந்தது. இதமான நறுமணம் அறையில் கமழ்ந்து கொண்டிருந்தது. கட்டிலின் மெத்தையின் மேல் மலர்கள் தூவப்பட்டிருந்தன. மனதில் மயக்கத்தைக் கிளப்பும் அந்த சூழலில் அர்ஜுன் தலையைப் பிடித்துக் கொண்டு அமர்ந்திருந்தான்.

அறைக்கதவு திறந்தது. அவன் திரும்பிப் பார்க்கவில்லை. 'அந்த மூஞ்சியை பார்க்க வேறு செய்யணுமா?'

மெல்லிய கொலுசின் ஒலி அவனை சமீபித்தது. அவன் எரிச்சலுடன் முதுகைக் காட்டிக் கொண்டு அமர்ந்துவிட... தர்ஷிணியும் அவனுக்கு புறமுதுகு காட்டி அமர்ந்தாள்.

''அர்ஜுன்... டேய்... அர்ஜுன்...''

தமிழ்செல்வி கதவைத்தட்ட முனைய - தாழிடப்படாத அறைக்கதவு 'பப்பரப்பா...' என்று திறந்து கொண்டது. அவள் அதிர்ந்து பின்வாங்கினாள்.

''ஏண்டா... மடையா... கதவைச் சாத்தித் தாழ்போட்டுக்கணும்கிற அறிவு இல்லையா?''

'இவள்தானே உள்ளே வந்தாள். இவள் தாழிடாமல் விட்டால் பேச்சு

எனக்கா...?'

அர்ஜுன் தர்ஷிணியை முறைத்துக் கொண்டே எழுந்து அறைவாசலுக்குச் சென்றான்.

''என்னம்மா...?''

''ஏண்டா அதட்டறே... தர்ஷினி பாலை வைத்து விட்டு வந்து விட்டாள். அதைக் கொடுத்து விட்டுப் போக வந்தேன்.''

''இப்போ.... இது ஒன்றுதான் குறைச்சல்...''

''ஏண்டா அலுத்துக் கொள்கிறாய்? உன் அப்பாவும் உன்னைப் போல்தான் ஆரம்பத்தில் புலம்பினார். அதற்குப் பின்னால் சரியாகி விடவில்லையா?''

'அதற்குப் பழிவாங்கத்தான் இவளை என் தலையில் கட்டி வைத்தாரா...?'

''இதைச் சொல்லத்தான் வந்தீங்களா? கொடுங்க...''

''இப்பவாவது ஒழுங்காய் தாழ் போட்டுக்கோடா...''

அர்ஜுன் மொணமொணவென்று வாய்க்குள் முணுமுணுத்தபடி அறைக்கதவை மூடித் தாழிட்டான். கோபத்துடன் கையிலிருந்த பால் தம்ளரைப் பார்த்தான்.

'இதை அவள் கண்ணில் வேறு காட்டணுமா...?'

ஒரே மூச்சாய் கையிலிருந்த பால் தம்ளரை காலி செய்தவன் கட்டிலுக்கு வந்தான். அவளை முறைத்தான். அவள் சளைக்காமல் பதிலுக்கு முறைத்தாள்.

''உன் மூஞ்சியைப் பார்க்கவே எனக்குப் பிடிக்காது. அது உனக்குத் தெரியுமா...? தெரியாதா...?''

''நான் கேட்க வேண்டிய கேள்வியை நீங்கள் கேட்கறீங்க... இது உங்களுக்குத் தெரியுமா...? தெரியாதா...?''

அர்ஜுனுக்கு தன் காதுகளையே நம்ப முடியவில்லை.

'என்னடா ஆச்சர்யம் இது. இவள் மரியாதையாய் 'ங்க...' போட்டுக் கூப்பிடுகிறாள். எப்போதும் 'வா... போ...' இல்லேன்னா சண்டை முற்றி 'வாடா... போடா'தானே... ஏன் இப்போது மட்டும் 'வாங்க... போங்க...' என்கிறாள். இதுதான் மஞ்சள் கயிறின் மகிமையா...?'

அவள் 'வாங்க' போட்டவுடன் அவனுக்கு ஏனோ அவளைப் பார்க்க வேண்டும் போல் தோன்றி விட்டது.

அவளைக் காலில் இருந்து தலைவரை நிறுத்தி... நிதானமாகப்



பார்த்தான்.

'ம்ம்... அழகாகத்தான் இருந்து தொலைக்கிறாள்...' என்று அவன் எண்ணமிட்டுக் கொண்டே மீண்டும் அவளைப் பார்த்து வைத்தான். அவள் முகம் சுடுத்தாள்.

'என்ன மாதிரிப் பார்க்கிறான் ராஸ்கல்...'

அவள் மனதிற்குள் தன்னை மரியாதையாய் விளிப்பது தெரியாமல், அவள் கழுத்தில் கிடந்த தாலியை உற்றுப் பார்த்துக் கொண்டிருந்தான் அர்ஜுன்.

பொறுத்துப் பொறுத்துப் பார்த்தவள்... கடைசியில் பொறுமையிழந்தவளாய்,

''என்ன பார்வை வேண்டிக்கிடக்கு...'' என்று சிடுசிடுத்தாள்.

''அப்படியெல்லாம் கனவு காணாதே... எனக்கு ஒன்றும் வேண்டிக் கிடக்கவில்லை...'' என்று அலட்சியமாக அர்ஜுன் கூறினான்.

''கனவு காண்கிறேனா...? யார்... நானா...?''

''இந்த ரூமில் நீயும், நானும்தானே இருக்கிறோம்?''

''ஹலோ... நீங்கள் என்ன பெரிய மன்மதனா...?''

''நான் அப்படிச் சொல்லிக் கொண்டேனா...?''

''சொல்லிக் கொள்ளவில்லை. மனதில அப்படி நினைத்துக் கொண்டிருக்கீங்க.''

''அப்படியெல்லாம் நினைக்கவில்லையம்மா... நான் மன்மதனாக இருந்திருந்தால்... எனக்கு ரதிதானே பெண்டாட்டியாக வந்து வாய்த்திருப்பாள்? உன்னை மாதிரி விடியா மூஞ்சியா பெண்டாட்டியாய் வந்து வாய்த்திருப்பாள்?''

''என் மூஞ்சி விடியா மூஞ்சின்னா... உங்கள் மூஞ்சி என்ன மூஞ்சி...?''

''அதை நீதான் சொல்லேன்...''

''ம்ம்... இஞ்சி தின்ற குரங்கின் மூஞ்சி...''

''ச்ச... ச்சி... ச்ச...''

''இப்போது எதற்கு பல்லியைப் போல சத்தம் போடுறீங்க?''

''உன் உவமையை ரசித்தேண்டி...''

அர்ஜுன் ரசித்து அவளை 'டீ' போட்டான். அவள் அதிர்ச்சியுடன் கண்களை அகல விரித்தாள்.

''என்னது... 'டீ'யா...?''

''ஆமாண்டி... என் பெண்டாட்டீ...''

"அர்ஜுன்... மரியாதை கொடுத்து, மரியாதை வாங்க வேண்டும்."

"என்னால் அது முடியாதுங்கறேன். இப்போ நீ அதுக்கு என்னாங்கிற...?"

"எனக்கும் பதில் பேசத் தெரியும்..."

"பேசு... நீ பேசாத ஆளா? நான்தான் அதைக் கேட்காத ஆளா...? பேசு... வாடா... போடான்னு பேசு. அதுக்குத்தானே நான் கெஞ்சக் கெஞ்சக் கேட்காமல் உன்னைப் பிடித்து என் தலையில கட்டி விட்டிருக்கிறார் என் ஆருயிர் அப்பா..."

தர்ஷிணி, அவனை 'வாடா... போடா...' என்று அழைக்க முடியாமல் தவித்தாள். அர்ஜுன், அவள் கோபம் அதிகரித்துத் தன் கைகளைப் பிசைந்து கொள்வதை வேடிக்கை பார்த்தான்.

"என்னடி... நம்பியார் மாதிரி கைகளைப் பிசைகிற... இங்கே நின்று வெறும் கையைப் பிசைவதற்கு சமையல் ரூமிற்கு போய் சப்பாத்திக்கு மாவு பிசைந்தேன்னு வை... சப்பாத்தி சூப்பர்... சூப்பராக வரும்."

"யு... யு..."

"சொல்லு... சொல்லு..."

"கதவைத் திறந்து விட்டால் பேசாமல் சமையல்கட்டிற்குப் போய் நிம்மதியாய் தூங்குவேன்."

"அப்படியா சொல்கிறாய்? போய் விடுகிறாயா? தேங்க்ஸ்... நான் நிம்மதியாய் தூங்குவேன்."

தர்ஷிணி ரோசத்துடன் அவனை முறைத்துக் கொண்டே சென்று கதவைத் திறக்கப் போனாள்.

"நில்..." என்றான் அர்ஜுன்.

அவள் நின்று... திரும்பிப் பார்த்தாள்.

"இன்றைக்கு போய் விடுவாய்... நாளைக்கு... அதற்கு மறுநாள்... என் வாழ்நாள் பூராவும் என்ன பண்ணுவாய்?"

"என்னவோ பண்ணுவேன். அது என் கவலை..."

"உன் வீட்டில் தான் அது உன் கவலை... இது என் வீடு..."

"அதுக்கு இப்ப என்னாங்கறீங்க...?"

"பேசாமல் வந்து கட்டிலில் படு."

"என்னது...?"

அவள் விழிகளை உருட்ட... அவனுக்கு தான் சொன்னதின் அர்த்தம் புரிந்தது.

"அடச்சீ... கட்டிலில் படுத்துத் தூங்கு."



"அதைக் கீழேயும் படுத்துத் தூங்கலாம்."

"ஏஸி குளிரில் தரையில் படுத்தால் இல்லாத வியாதியெல்லாம் வரும்..."

"என்னைப் பற்றி யாரும் கவலைப்பட வேண்டாம்."

"உன்னைப் பற்றி யார் கவலைப்பட்டது? என் அப்பாவோ... அம்மாவோ... எசகுபிசகாய் நீ தரையில் படுத்துத் தூங்குவதைப் பார்த்து விட்டாங்கன்னு வை... உனக்கு நிமோனியா காய்ச்சலை வரவழைக்க நான் திட்டமிட்டு சதி செய்ததாக என்மேல் குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்து விடுவார்கள். அதிலும் என் அப்பா என் மேல் கேஸை போட்டு விடுவார். அந்த அளவிற்கு உன் பாட்டால் அவரை அலைபாய வைத்திருக்கிறாய்."

"அதற்காக உங்கள் கூடவெல்லாம் என்னால் கட்டிலில் படுக்க முடியாது."

"பின் வேறு யார்...? வேண்டாம் தர்ஷிணி, என் வாயைப் பிடுங்காதே. நான் எக்குத்தப்பாய் கேட்டு விடுவேன்."

"என்னவோ புதிதாய் கேட்டுவிடப் போவது போல பிலிம் காட்டுறீங்களே... உங்களைப் பற்றி எனக்குத் தெரியாதா...?"

"தெரியுமதானே... என்னைப் பற்றி நல்லாத் தெரியுமதானே... உன் மூஞ்சியை மதித்து... நான் திரும்பிக்கூடப் பார்க்க மாட்டேன்னு உனக்குத் தெரியும்தானே... அப்புறம் என்னடி... சீன் காட்டிக் கொண்டு இருக்கிறாய். பேசாமல் படுத்துத் தூங்கு."

தர்ஷிணி அவனைப் போல பேச முடியாமல், தன் கோபத்தை தலையணையின் மேல் காட்டினாள். அர்ஜுனின் பக்கம் அவள் வீசிய தலையணை சுவரில் மோதி விழுந்தது. அவன் கோபத்துடன் பல்லைக் கடித்தான்.

"என்னடி... திமிரா...?"

"ஆமாம்... பிறந்ததில் இருந்து... நீங்கள் சோறு போட்டு வளர்த்த திமிர்..."

"ஏய்... ஏன்டி தலையணையைத் தூக்கி சுவரில் எறிகிறாய்?"

"அது வேறு என்மேல் பழியா...? நான் உங்கள் பக்கம் எடுத்துப் போட்டேன். அது சுவரில் போய் மோதுகிறது."

"அவ்வளவு அகங்காரம் உனக்கு."

தர்ஷிணி எழுந்து போய் தலையணையை எடுத்தாள். அவன் பக்க மெதுவாய்... மிக மெதுவாய் வைத்தாள்.

"போதுமா...?"

''போதாது.''

''வேறு என்ன செய்ய வேண்டும்?''

''என் காலை அமுக்கி விடவேண்டும்.''

''அதற்கு வேறு ஆளைப் பாருங்கள்.''

''ஏன்... நீயே பாரேன்...''

''என்னத்தைப் பார்க்க...?''

''எனக்கு வேறு பெண்ணைப் பார்...''

''ஆஹா... அதற்கென்ன... தாராளமாய் பார்த்து விட்டால் போகிறது. நீங்களும் எனக்காக வேறு மாப்பிள்ளை பாருங்களேன்.''

அர்ஜுன் பதில் பேசாமல் படுத்துக் கொண்டான். எப்படி அவளால் அவனை வாடா... போடா... என்று சொல்ல முடியவில்லையோ... அப்படி... அர்ஜுனால் 'அதற்கு என்ன... உனக்கு வேறு மாப்பிள்ளையை பார்த்து விட்டால் போகிறது' என்று சொல்ல முடியவில்லை.

தர்ஷினி கட்டிலின் இந்த ஓரமாகப் படுத்துக் கண்களை மூடிக் கொண்டாள். அவளுக்கு தூக்கம் வரவில்லை. ஓர் ஆணின் அருகாமையை உணர்ந்தவளால் தூங்க இயலவில்லை. அர்ஜுன் புரண்டு அவள் புறம் திரும்பிப் படுத்தான். அவள் அவசரமாய் கண்களை மூடிக் கொண்டாள். அவள் தலையில் சூடியிருந்த மல்லிகையின் வாசம் அர்ஜுனின் நாசியில் நுழைந்தது. அவன் மனம் மயங்கியது. முதல் முதலாய் அவளை தாபத்துடன் பார்த்தான் அவன்.

## 4

அவளிடம் லேசாக அசைவு தோன்ற... இப்போது அவசரமாய் அவன் கண்களை மூடிக் கொண்டான்.

'ராங்கி பிடித்தவள்... நான் அவளுக்காக ஏங்குவதாக நினைத்துக் கொள்வாள்.'

அதே நேரத்தில்... லேசாக அரைக் கண்ணைத் திறந்து அவனைப் பார்த்தாள் தர்ஷினி. பட்டு வேட்டி, பட்டுச் சட்டையில்... தலைமுடி கலைந்து... கவர்ச்சிகரமான தோற்றத்துடன் உறங்கிக் கொண்டிருந்தான் அர்ஜுன்.

அவனின் அந்த இயல்பான ஆண்மை நிறைந்த அழகு அவளை ஆகர்ஷித்தது.



'ம்ம்... எப்படி இருக்கிறான்...? 'மாப்பிள்ளையைப் போல் ஜம்மென்று இருக்கிறான்' என்று சொல்வார்களே... அந்த மாப்பிள்ளையின் டிரெஸ்ஸில் இவன் ஹீரோ போலத்தான் இருக்கிறான். அப்புறம்... ஏன்... ரமா இவனிடம் ஜொள்ளு விடமாட்டாள்?'

அவள் விழி திறந்து அவனை ரசித்துக் கொண்டிருக்கும் போது அவன் புரண்டு படுத்தான். அவள் சட்டென்று கண்மூடிக் கொண்டாள். அவள் உடல் நடுங்கியது.

'நான் பார்த்ததை அவன் பார்த்திருப்பானோ... என்னவோ அவனைப் பார்த்து நான் ஜொள்ளு விட்டதாக நினைத்துக் கொள்ள மாட்டானா...?'

அதன் பின்னால் இருவருமே ஒருவர் பக்கம்... ஒருவர் திரும்பவில்லை. இந்த லட்சணத்தில் முதலிரவைக் கொண்டாடி முடித்து விட்டு... அறையை விட்டு வெளியே வந்தவர்களைக் கேலி செய்ய உறவினர் கூட்டம் காத்திருந்தது.

''ஆயிரம் இரவுகள் வருவதுண்டு...

ஆனால் இதுதான் முதலிரவு...'' என்று பாடினாள் தர்ஷினியின் அத்தை.

''நேத்து ராத்திரி... யம்மா...'', என்று பாடி கண் சிமிட்டினாள்... ரமாவின் அண்ணி.

''உன் மேல ஆசை வைச்சேன்...

உத்தமியே மெத்தவுண்டு...

சத்தியமாச் சொல்லுறேண்டி... தங்க ரத்தினமே...

தாள முடியாது கண்ணே... பொன்னு ரத்தினமே...'' தர்ஷினியின் பாட்டி பாடினாள்.

'ஐயோ...!' என்று இருந்தது தர்ஷினிக்கு. ஆனாலும் வெட்கப்படுவது போல் தலையைக் குனிந்தபடி... குளிக்க ஓடி விட்டாள்.

மாப்பிள்ளையும்... பெண்ணும்... மறுவீட்டு விருந்திற்குச் செல்லத் தயாராகி விட்டார்கள்.

''இங்கே பார்... என்னால்... உன் வீட்டில் ஒருநாள்தான் தங்க முடியும். உன் அப்பா - அம்மாவிடம் சொல்லிவிடு...'' என்றான் அர்ஜுன்.

''ஏன்... உங்களுக்கு வாய் இல்லையா...? நீங்கள் சொல்ல வேண்டியதுதானே... நான் சொல்ல முடியாது...'' என்றாள் தர்ஷினி.

''எரிச்சலைக் கிளப்பாதேடி... நான் சொன்னால் உன் அப்பா... என்னைத்

தாங்குகிறேன்னு நினைத்துக் கொண்டு... 'அதெல்லாம் முடியாது மாப்பிள்ளை. நீங்க கட்டாயம் இருந்துவிட்டுத்தான் போகணும்'னு கெஞ்சுவா. எனக்கு அது டார்ச்சராக இருக்கும்.''

''எங்க அப்பா பேசுவது உங்களுக்கு டார்ச்சராக இருக்கிறதா?''

''ஆமாம்... அதுக்கு என்னாங்கிற இப்ப...?''

''உங்க அப்பா பேசினால் மட்டும் எப்படி இருக்கிறதாம்...?''

''உங்க அப்பா பேசுவதைவிட... என் அப்பா பேசுவது அதிக டார்ச்சராக இருக்கும்டி...''

இப்படிச் சொல்கிறவனிடம் எப்படி வாதத்தையாடுவது?

''பார்க்கிறேன்...'' என்றாள் தர்ஷிணி.

''யாரைப் பார்க்கிறாய்...?'' என்றான் அவன் கிண்டலாக...

''நிச்சயமாய் உங்களை இல்லை...'' என்று அவள் அவனது முகத்தை உடைத்தாள்.

''அதை நான் எதிர்பார்க்கவும் இல்லை...'' என்று அவன் விறைத்துக் கொண்டான்.

**ச**ண்டைக் கோழிகள் போல் அவர்கள் முறைத்துக் கொண்டே மறுவீட்டு விருந்திற்குப் போனார்கள்.

மட்டன் பிரியாணி... கோழி வறுவல்... மீன் பொரியல்... அவித்த முட்டை... நண்டு குழம்பு என்று... மதிய விருந்து தடபுடலாக இருந்தது.

''போதும்... அத்தை... போதும்...'', என்று அர்ஜுன் அலற... அலற...

''அ..... என்ன மாப்பிள்ளை... இவ்வளவு கம்மியாய் சாப்பிடுறீங்க... உங்க மாமாவெல்லாம் கல்லைக் கூடச் சாப்பிட்டு ஜீரணம் பண்ணி விடுவார். நீங்களானால் இப்படி குருவி கொறிப்பது போல்... கொறிக்கறீங்களே...'' என்று சரோஜா அவன் இலையில் அள்ளி... அள்ளி வைத்து விட்டாள்.

அவர்களுக்காகக் கொடுக்கப்பட்டிருந்த அறையில்... வயிற்றைப் பிடித்துக் கொண்டு.... வயிற்று வலியால் துடித்துக் கொண்டிருந்தான் அர்ஜுன்.

''மாப்பிள்ளை சிக்கன் சூப் குடிக்க மறந்து விட்டார். நீ கொண்டு போய் கொடுத்து விட்டு வாம்மா...'' என்று சரோஜா கெஞ்சியதால்... கையில் சூப் தம்ளரோடு அறைக்குள் வந்தாள் தர்ஷிணி.

''என்னடி அது... கையில் ...?''

''அம்மா சூப் கொடுத்து விட்டிருக்காங்க.''



''என்னது...?''

அவன் அலறி, வயிற்றைப் பிடித்துக் கொள்ளவும், தர்ஷிணி பதறி விட்டாள். அவசரமாய் சூப் தம்ளரை மேஜையில் வைத்து விட்டு... அவனருகில் ஓடி வந்தாள்.

''என்னங்க... என்ன ஆச்சு...?''

''ஏண்டி... நீ ஒரு முடிவோடுதான் என்னை மறு வீட்டு விருந்திற்கு கூப்பிட்டுக் கொண்டு வந்தாயா...?''

''என்னன்னு சொன்னால்தானே தெரியும்.''

''உங்க அம்மா... சாப்பாட்டைப் போட்டே என்னைப் பழிவாங்கிட்டாங்கடி...''

''உளறாதீங்க...''

''உளறுகிறேனா... ஐயோ... அம்மா... வயிறு வலிக்கிறதுடி...''

தர்ஷிணிக்கு அவன் துடிப்பதைக் கண்டு பாவமாக இருந்தது. அதேசமயம் அம்மாவிடம் சொன்னால்... அவனைப் பார்க்க அதைவிடப் பாவமாக இருக்கும் என்று தோன்றியதால் அவசரமாய் வெளியே சென்றாள். திரும்பி வரும் போது கையில் ஒரு குளிர் பான பாட்டிலோடு வந்தாள்.

''எழுந்திருங்க...''

''என்னடி இது... திட்டம் போட்டு... நீயும் எதையோ குடிக்கக் கொண்டு வந்திருக்க...''

''ம்ச்... சத்தம் போடாமல் இதைக் குடிங்க...''

''சத்தம் போடுகிறேனா...? ஏண்டி சொல்லமாட்டே... தலைவலியும், வயிற்றுவலியும் தனக்கு வந்தால்தாண்டி தெரியும்.''

''அது எனக்கு வரும் போது தெரிந்து கொள்கிறேன். இப்போது இதைக் குடிங்க.''

அர்ஜுன் அதை வாங்கிக் குடித்தான்.

''என்னடி ஒரு மாதிரிக் கசக்கிறது...''

''ஓமத்திரவம் கலந்தால் அப்படித்தான் இருக்கும்.''

''ஓமத்திரவமா...?''

''ஆமாம்... அது வயிற்றுவலிக்கான மருந்து. அதைத் தனியாய் குடிக்கக் கஷ்டப்படுவீங்கன்னுதான்... கூல்டிரிங்க்கோடு கலந்தேன்... இப்ப கண்ணை மூடிப் படுங்க... கொஞ்ச நேரத்தில் சரியாகி விடும். சரியா...'', அவள் அறைக்கதவை மூடிக் கொண்டு போய் விட்டாள்.

அவளது கரிசனம் கண்டு அவனுக்கு ஆச்சரியமாக இருந்தது.

வயிற்றைப் பிடித்துக் கொண்டு கண்களை மூடியவன்... அப்படியே தூங்கி விட்டான்.

மாலையில் அவள் வந்து எழுப்பவும் எழுந்தவன்... அதை உணர்ந்தான்... வயிற்றுவலி மாயமாய் மறைந்து போயிருந்தது.

''என்ன... ஒரு மார்க்கமாய் விழிக்கறீங்க...?''

''தர்ஷினி... இட்ஸ் கான்...''

''எது போய் விட்டது...?''

''என் வயிற்றுவலி...''

''அப்பாடி... தப்பித்தேன். இல்லாவிட்டால் என் குடும்பத்தின் மீது, உங்களைக் கொலை செய்ய சதி செய்தாங்கன்னு பழியைப் போட்டு இருக்க மாட்டீங்களா?''

''ஓஹோ... அதற்காகத்தான் எனக்கு மருந்து கொடுத்து அம்மையார் காப்பாற்றினீங்களா?''

''ஆமாம்... வேறு எதற்குன்னு நீங்க நினைத்தீங்க...''

''ம்ம்... என்மேல் காதலாகிக் கசிந்துருகி விட்டாயன்னு நினைத்தேன்...''

''நினைப்புதான் பிழைப்பைக் கெடுக்குமாம்...''

''யார் பிழைப்பை...?''

''சொல்கிறவங்க பிழைப்பை...''

''என் பிழைப்பை நம்பித்தான் உன்னை என் தலையில் கட்டி வைத்திருக்கிறார்கள். அதை நினைவில் வை... ஆமாம்... அது என்ன கையில்...?''

''டீ...''

''அம்மாடி... உன் வீட்டில் எதையாவது என் வயிற்றில் கொட்டிக் கொண்டே இருக்க வேண்டுமென்று வேண்டுதல் எதுவும் வைத்திருக்கிறீங்களா...?''

''ச்சு... அலறாமல் இதை வாங்கிக் குடிங்க...''

அவளை நம்பி... எதையும் வாங்கிக் குடிக்கலாம் என்று சற்றுமுன் நம்பிக்கை வந்திருந்த காரணத்தினால் அர்ஜுன் அதை வாங்கிக் குடித்தான்.

''என்னடி... இது... இதுவும் ஒரு மார்க்கமாகவே இருக்கு.''

''இஞ்சி டீ... அப்படித்தான் இருக்கும். நீங்களே ஒரு மார்க்கமான



ஆள்தான். அதனால் எதைப் பார்த்தாலும் உங்களுக்கு ஒரு மார்க்கமாகத்தான் தெரியும்.''

அர்ஜுன் உதட்டைக் கடித்தபடி அவளை ஒரு மார்க்கமாகவே பார்த்தான். அவனது பார்வையை உணர்ந்தவள், முகம் சிவப்பதை அவன் கண்டுபிடித்து விடாமல் இருக்கும் பொருட்டு ஜன்னலோரமாய் சென்று நின்று... தெருவைப் பார்த்தாள்.

தர்ஷினிக்கு எப்போதுமே முடி நீளமாக இருக்கும். அது இப்போது... இன்னும் அழகுற நீண்டு இருந்தது.

'ம்ம்... எப்படி வாளிப்பாய் வளர்ந்து விட்டாள்...!'

பதினேழு வயதில் அவளைப் பார்த்தவன்... ஆறு வருடங்கள் கழித்து... மீண்டும்... இப்போதுதான் அவளைப் பார்க்கிறான்.

இடைப்பட்ட காலத்தில்... இளமையின் மெருகேறி... அவள் புதுப்பொலிவோடு இருப்பதை அவனால் புரிந்து கொள்ள முடிந்தது. அவளிடம் தென்பட்ட பெண்மையின் மென்மை அவனை 'வா...!' என்று அழைத்தது.

'எழுந்து சென்று அவளை பின்னால் இருந்து கட்டி அவளது பின்னங் கழுத்தில் முத்தமிட்டால் என்ன...' என்று அவன் மனதில் எண்ணம் ஒரு நொடி ஓடியது.

அவன் மனதை இழுத்துப் பிடித்துக் கொண்டான்.

'ஏன்... அவள் என் அருகில் வரமாட்டாளாமா...?' ஆணின் இயல்பான வீம்பு அவனுக்குள் தலைதூக்கியது.

அவளிடமிருந்து வந்த மல்லிகையின் பிரத்யேக நறுமணம் அவனை கிளர்ச்சியுறச் செய்தது. போதாக குறைக்கு தர்ஷினி வேறு... தன் மனத்தை மறைக்கும் பொருட்டு...

**''மல்லிகை... என் மன்னன் மயங்கும்**
**பொன்னான... மலரல்லவோ...**
**எந்நேரமும்... உன்னாசை போல்...**

- என்று மெல்லிய குரலில் பாடிக் கொண்டிருந்தாள்.

அந்த வினாடியில்தான்... அவனுக்குள் அந்த மாற்றம் நிகழ்ந்தது.

'இவள்... என்னுடையவள்... எனக்கே உரிய... என் மனைவி!' என்று அவன் நெஞ்சம் கூவியது.

# 5

**த**டக்... தடக்கென்று... சீராக ரயில் ஓடிக் கொண்டிருந்தது. ஏஸி கம்பார்ட்மெண்டில் எதிரும்... புதிருமாய... அர்ஜுனும், தர்ஷினியும் அமர்ந்திருந்தார்கள். அவர்கள் தேன்நிலவைக் கொண்டாட கோவா போய்க் கொண்டிருந்தார்கள்.

கார்கோ புல்ஓவர்... ஜீன்ஸ் பேண்ட்டில் அவன் இன்னும் கவர்ச்சியாக இருந்தான். சும்மாவே அவனைப் பார்த்தால் அலைபாய ஆரம்பிக்கும் தர்ஷினியின் மனது, இப்போது அதிகமாய் அலைபாய ஆரம்பித்தது.

அவள் மனதை மறைக்க... ஜன்னல் கண்ணாடியின் வழி வெளியே வேடிக்கை பார்க்க ஆரம்பித்தாள். அவளை விழுங்கி விடுவதைப் போல பார்த்துக் கொண்டிருந்த அர்ஜுன் முகம் கடுத்தான்.

'ஏன்... இவளுக்கு, என் முகத்தைக் கண்டால் ஆகாதா...'

அவன் வேண்டுமென்றே கால்களை நீட்டி அமர்ந்து கொண்டான். அவளது முழங்காலில் அவனது முழங்கால் இடிக்க... அவள் பதறிப் போய் ஒடுங்கி உட்கார்ந்தாள். அவனுக்கு இன்னமும் கோபம் அதிகரித்தது.

'பெரிய... கற்புக்கரசி... நான் அவள் மேல் பட்டால், அவள் கற்பு குறைந்து விடுமாம். இவள் கற்பை யாருக்காக கட்டிக் காக்கிறாள்...?'

அவன் எழுந்து பாத்ரூமை நோக்கி நடந்தான். எழும் போது... அவனது முழங்கை அவள் மேல் நன்றாக பட்டது. போகும் போது அவளை உரசிக் கொண்டே போனான்.

தர்ஷினி முகம் சிவந்து விட்டது. அவனது உடல்பட்ட இடங்கள் சிலிர்க்க... அவளது மனதில் ஆசைக் கனல் மூண்டது.

'காதல் என்ற நோய்க்கு...
காதலே மருந்து...'

அவசரமாய் மனம் சிறு கவிதையொன்றைச் சொன்னது.

அவள் உணர்ச்சி வேகத்தில் கண் கலங்கினாள். இமைகளைச் சிமிட்டி அதை அடக்கிக் கொண்டாள். அருகிலிருந்த இருக்கையில் அமர்ந்து கொண்டிருந்த பெரியவரின் புருவங்கள் மேலேறின.

'பாவம்... இந்தப் பெண் தனியாகப் போகுது போல... அந்த தடிப்பயல்... இவளிடம் வம்பு பண்ணிக் கொண்டிருக்கிறானே... காலை நீட்டுகிறான்... கையைப் போடுகிறான்... போதாக் குறைக்கு...' அவளை உரசியபடி எழுந்து



போகிறான். என்ன நினைத்துக் கொண்டிருக்கிறான்...'

அர்ஜுன் அப்போது தர்ஷினியின் அழகைத்தான் நினைத்துக் கொண்டிருந்தான்.

'ராட்ஸஸி... யார் இவளை... இவ்வளவு அழகாக இருந்து தொலையச் சொன்னது? என் கையில் தாலியையும் வாங்கிக் கொண்டு என்னை... எவனோ ஒருவன் போல முறைத்துக் கொண்டு வருகிறாள். இந்த லட்சணத்தில் தேன்நிலவை வெற்றிகரமாய் கொண்டாட என் ஃபிரண்ட்ஸ்... டிப்ஸ் வேறு தந்திருக்கிறார்கள். அவர்களுக்குத் தெரியுமா என் அவதி... அவளைத் தொடவும் முடியாமல்... விடவும் முடியாமல்... நான் அவஸ்தைப் பட்டுக் கொண்டிருக்கிறேன்.'

சற்று நேரம்... வாசல் பக்கமாக நின்று கொண்டிருந்து விட்டுத் திரும்பி வந்தான்.

தூரத்தில் அவன் வரும்போதே... தர்ஷினியின் கண்களில் மின்னல் வெட்டியதை அவன் கவனித்து விட்டான்.

'இரக்கமில்லாதவள்... என்னைக் காணோமென்று தவித்துக் கொண்டிருக்கிறாள். ஆனால் அதை வெளியே மட்டும் காட்டிக் கொள்ள மாட்டாள். இவளுக்கு இவ்வளவு இருந்தால் எனக்கு எவ்வளவு இருக்கும்?'

அவன் மீண்டும் அவளைப் பார்த்தவாறு வந்து... அவள் மேல் உராய்ந்தபடி கடந்து சென்று அவளெதிரில் அமர்ந்தான். அவள்... உதட்டைக் கடித்தவண்ணம் ஜன்னல் பக்கம் திரும்பிக் கொண்டாள். அவன் அவளைப் பார்த்த வண்ணம் கைகளை வேண்டுமென்றே நீட்டி... சோம்பல் முறித்தான். அவனது கைகள் அவள் மீது பட... அவள் குறுகிக் கொண்டாள்.

அவ்வளவுதான்... அந்தப் பெரியவர் கோபத்துடன் எழுந்து அவனது சட்டையைப் பிடித்தார்.

''ஏண்டா... அப்போதிருந்து நான் பார்த்துக் கொண்டிருக்கிறேன். நீ கையை நீட்டுற... காலை நீட்டுற... அந்தப் பெண்ணின் மேல் - எருமை மாடு... குட்டிச் சுவரின் மேல உராய்வது போல உராய்ந்து கொண்டு போகிற... போதாக் குறைக்கு அந்தப் பெண்ணை முழிச்சு... முழிச்சு பார்க்கிற... நீ என்ன நினைத்துக் கொண்டிருக்கிற...? உனக்கெல்லாம் அக்கா... தங்கச்சி... இல்லையா...?''

தர்ஷினி... பதறி எழுந்து... விளக்கம் சொல்ல வார்த்தை வராமல்... அதிர்ச்சியுடன் தடுமாறி நிற்க... அர்ஜுன் அவளை 'இது... போதுமா...?'

என்பது போல பார்த்தான். மற்ற இருக்கையில் இருந்தவர்கள் அவர்களைச் சுற்றிக் கொள்ள - அர்ஜுன் அமைதியாக அவரின் கைகளை விலக்கி விட்டு, தன் சட்டையை நீவி விட்டுக் கொண்டு அவரை நிமிர்ந்து பார்த்தான்.

''எப்படி சார்... இவ்வளவு கரெக்டாக கண்டுபிடித்தீங்க...? ஆமாம்... எனக்கு அக்கா... தங்கை இல்லைதான்...''

''டி... எவ்வளவு திமிராகப் பதில் சொல்கிறாய்...?''

''நான் பிறந்ததில் இருந்து இப்படித்தான்...''

''எய்... அந்தப் பெண்ணின் முகத்தைப் பாருடா...''

''வண்டி கிளம்பியதில் இருந்து பார்த்துக் கொண்டுதானே இருக்கிறேன். உங்களுக்குத்தான் அது பொறுக்கவில்லை. அது ஏன் என்றும் எனக்குத் தெரியவில்லை.''

''அடப்பாவி... இப்படி நியாயவாதி போல் பேசுகிறாயே...''

''நான் நியாயவாதியேதான்... அதில் உங்களுக்கு சந்தேகமே வேண்டாம்...''

''இந்தப் பெண் யாரோ... எவரோ...''

''அது உங்களுக்குத்தான்... எனக்கு இந்தப் பெண் யாரோ... எவரோ... இல்லை...''

''எவ்வளவு அடாவடியாய் பேசுகிறான் பாருங்கள். டி.டி.ஆர். சார்... நல்ல நேரத்தில் வந்தீங்க. இந்த ஆளை விசாரிங்க...''

அவர்களின் அருகே வந்த டி.டி.ஆர். புருவம் தூக்கினார். ''என்ன மேடம்... என்ன தகராறு?'' என்று தர்ஷிணியிடம் வினவினார்.

'இவனுக்கு என்னைக் கண்ணுக்கு தெரிகிறதா...? என் அழகான பெண்டாட்டியைத்தான் தெரிகிறதா?' அர்ஜுன் மனதிற்குள் பொறுமினான்.

''நத்திங் சார்... இவர், என் ஹஸ்பெண்டை தவறாக நினைத்து சத்தம் போட்டுக் கொண்டிருக்கிறார்.'' தர்ஷிணி முகம் சிவக்க விளக்கம் கொடுத்தாள்.

''ஹஸ்பெண்டா...'' அந்தப் பெரியவர் திகைத்து விழிக்க...

'முதல் முறையாய் அவள் வாயால் என்னைத் தன் புருஷன் என்று சொல்லியிருக்கிறாள்...' அர்ஜுனின் மனதில் சாரல் அடித்தது.

''ஏம்மா... இவர் உன் புருஷனா...?''

''ஆமாம் சார்...''



அந்தப் பெரியவர்... அர்ஜுனின் கைகளைப் பிடித்து ''ஐ ஆம் ஸாரி...'', என்று அசடு வழிந்தார்.

''நல்லாப் பிரச்னையைக் கிளப்பினீங்க போங்க... சார்... இவங்க டிக்கெட்டில் மிஸ்டர் அண்ட் மிஸஸ் அர்ஜுன்னு தான் போட்டிருக்கிறது.'' டி.டி.ஆர். விளக்கம் கொடுத்து விட்டு நகர்ந்தார்.

அந்தப் பெரியவர்... புது மணமகள் போல வெட்கப்பட்டுக் கொண்டு... ஆயிரம் முறை அர்ஜுனிடம் மன்னிப்புக் கேட்டு விட்டு... அவருடைய இருக்கையில் போய் அமர்ந்தார்.

அர்ஜுன் பல்லைக் கடித்தபடி தர்ஷிணியை முறைத்தான். அவள் தலைகவிழ்ந்தபடி தன் இடத்தில் அமர... அவனும் அவளுக்கு எதிரே அமர்ந்தான்.

இப்போது நன்றாகவே கால்களை அவள் புறம் நீட்டினான். அவள் கால்களை விலக்கிக் கொள்ளவில்லை. பெரியவர்... இனி இந்தப் பக்கம் திரும்பியே பார்க்க கூடாது என்று மனதில் சபதம் போட்டுக் கொண்டவராய்... முகம் திருப்பிக் கொண்டார்.

அவனது கால்களின் தொடுகை உணர்வு... தர்ஷிணியின் மனதில் ஓர் இன்ப அவஸ்தையை உண்டு பண்ணியது. அவள் மெதுவாய் கால்களை நகர்த்தினால்... அவன் சரிந்து மீண்டும் அவள் கால்களின் மேல் பட்டான்.

'கள்ளன்...' அவள் பல் கடித்து அவனது சேஷ்டையை மனதிற்குள் ரசித்தாள்.

'பிடிவாதக்காரன்... ஸ்கூல் டயத்தில் பண்ணிய அழும்பு அப்படியே இன்னும் மாறாமல் இருக்கிறது...'

அவனது முன் நெற்றியில் படிந்து, கலைந்திருந்த தலைமுடியில்... விரல் விட்டுக் கோத... அவள் மனம் துடித்தது.

அந்த ரயிலின் மெல்லிய ஊஞ்சலாட்டத்தில்... தாள லயம் மாறாத... அதன் சீரான சப்தத்தில்... அவள் மனதில் அவன் மீது காதல் பிறந்தது. அவளது நெஞ்சம் மாறியது.

**'மாறியது நெஞ்சம்...**
**மாற்றியவர் யாரோ...**
**காரிகையின் உள்ளம்...**
**காண வருவாரோ...'**

- அவளது மனம் பாடியது. அவள் ஒயிலாக சரிந்து அமர்ந்து... அவனைப் பார்த்தாள். அவன் விழி மூடி சற்றுமுன் நிகழ்ந்த நிகழ்வைப் பற்றிச்

சிந்தித்துக் கொண்டிருந்தான். அவன் பாராதபோது அவனைப் பார்ப்பது அவளுக்கு சுகமாக இருந்தது.

'ஆடை தந்து... மலர் வாடை தந்து... மண
மேடை வந்தவனைக் கண்டு...
ஆசை முந்திவர... நாணம் பிந்திவர...
பேசிப் பார்க்கும் நினைவுண்டு...
அம்மம்மா... அம்மா...
இந்த நேரம்... அந்த நெஞ்சில்...
என்ன நினைவோ...?'

- மனதில் பாடல் தொடர்ந்து ஒலித்தது. அவன் கண் திறந்து அவளைப் பார்க்க... அவசரமாய் அவள் பார்வையை விலக்கிக் கொண்டாள்.

'பாராதது போல் என்னைப் பார்க்கிறாள்...
சேராதது போல் என்னில் சேர்கிறாள்...
இவள் காதல் தந்தவள்... அன்று மோதல் கொண்டவள்
என்று சேர்ந்து என்னில் கலப்பாளோ...?'

- அவன் மனம் அவசரக் கவிதை சொன்னது. அவள் மனதில் அவனைப் பற்றிய பாடல் இருக்க... இருவரும் அதை வாய் விட்டுச் சொல்லாமல்... வாயிருந்தும் ஊமைகளாய் அந்த ரயில் பயணத்தை ரசித்தவாறு சென்றனர்.

ரயில் நின்றது... அர்ஜுன் எழுந்து பெட்டியையும்... பைகளையும் எடுத்துக் கொண்டான். அவள் ஒன்றை வாங்கிக் கொள்ள முயல... கொடுக்க மறுத்து... ரயிலை விட்டு இறங்கி பெட்டியை தரையில் வைத்து விட்டு... அவள் பிளாட்பாரத்தில் இறங்க கை கொடுத்தான்.

அவள் தயங்கவும்... அவன் முறைத்தான். அவள் அவசரமாய் அவன் கரம்பிடித்துக் கொண்டு... தரையில் கால் பதித்தாள்.

## 6

**த**ங்க நிறத்தில் மண் துகள்கள் மின்னிக் கொண்டிருந்த கோவா கடற்கரையில் நடந்து கொண்டிருந்தார்கள் அர்ஜுனும்... தர்ஷினியும்...

கையிலிருந்த செல்போனில்... கண்ணுக்குத் தென்படுகிற இயற்கைக் காட்சிகளை படம் பிடித்தபடி தர்ஷிணி வந்து கொண்டிருந்தாள்.



'என்னவோ சுற்றுலாவுக்கு வந்தது போல என்ஜாய் பண்ணிகிட்டு இருக்கிறாளே... பக்கத்தில புருஷன்காரன் இருக்கிறான் என்ற நினைப்பு கொஞ்சமாவது இருக்கிறதா...?'

அர்ஜுன் எரிச்சலுடன் அவளைக் கனல்பார்வை பார்த்தான். அந்த நொடியில் கண்ணில் தென்பட்ட ஆண், பெண் ஜோடிகளின் நெருக்கத்தைப் பார்த்து முகம் சிவக்க... அர்ஜுனைப் பார்த்த தர்ஷிணி - அவனது கனல் பார்வையைக் கண்டதும்... கண் திருப்பிக் கொண்டாள்.

'அடக்கடவுளே... அந்த ஜோடிகளைப் போல... என்னையும் நீ கொஞ்சுகன்னு நான் கேட்பது போல் நினைத்து விட்டானோ... இவனுக்குத்தான் என்னைப் பிடிக்காதே... எதிரியைப் போல் நினைத்துக் கொண்டிருக்கிறானே... அப்புறம் என்னை இந்தப் பார்வை பார்க்காமல் வேறென்ன செய்வான்...?'

அவள் அதற்குப்பின் மறந்தும் அவன் பக்கம் திரும்பிப் பார்க்கவில்லை. அதை உணர்ந்த அர்ஜுனுக்கு கடல் காற்றும்... கனல் காற்றாய் மாறி விட்டது... அவன் பல்லை நறநறவென்று கடித்தான்.

உறவினர் கூட இல்லாத தனிமை... அறிமுகம் இல்லாத புதிய ஊர்... காலையில் எழுந்து வேலைக்கு ஓட வேண்டுமென்ற கடமைத் தளைகள் இல்லாத நாள். கண்ணுக்கு எட்டிய தூரமெல்லாம் கருத்தைக் கவரும் கடலும் இயற்கைக் காட்சிகளும்... அருகில் அழகான புத்தம்புது மனைவி... தென்படும் இடங்களில் எல்லாம் பார்க்க நேரும் ஆண்... பெண்ணின் நெருக்கம்.

அர்ஜுனின் உடல் சூடேறியது. 'இப்படி ஒரு சூழ்நிலையில் அவள் இணக்கமாக நடந்து கொண்டால் எப்படியிருக்கும்' என்ற எதிர்பார்ப்பு அவன் மனதில் எழுந்தது.

'எப்படி வருகிறாள் பார்... ஜடம்... கண்ணுக்கு முன்னால் எல்லோரும் இப்படி இழைகிறார்களே... அதைப் பார்த்துக் கூட இவளுக்குள் எந்த உணர்ச்சியும் உண்டாகவில்லையா? மஹூம்... எனக்கென்று வந்து வாய்த்திருக்கிறாளே... ஜென்மம்... இவளுக்குத்தான் என்னைக் கண்டால் பிடித்துத் தொலைக்க மாட்டேன் என்கிறதே...'

அவள் என்னமோ... இயல்பாக மணலைத் தட்டியபடி யதார்த்தமாகத்தான் அவனை பார்த்து வைத்தாள். ஆனால் மனதிற்குள் பொங்கிக் கொண்டிருந்த அர்ஜுன் அவளுடன் சண்டைக்குப் போனான்.

''என்னடி... பார்க்கிற...?''

''நான் சும்மாதான் பார்த்தேன்...''

''இதுதான் நீ சும்மா பார்க்கும் லட்சணமா...?''

''ஏங்க... இப்போ... நான் எப்படித்தான் பார்த்தேன்னு நீங்க நினைக்கறீங்க...?''

''ஏண்டி... கண்ணகி மதுரையைப் பார்த்த பார்வையை நீ என்னைப் பார்த்து வைத்து விட்டு... அதுக்கு வியாக்கினம் வேறு பேசுகிறாயா...?''

''வியாக்கினமும்... விலலங்கமும்... உங்களுக்குத்தான் தெரியும்... எனக்குத் தெரியாது...''

''ஆமாம்... உனக்கு ஒன்றுமே தெரியாது... கையில் பீடிங் பாட்டிலோடு உட்கார்ந்திருக்கும் பேபி நீ...''

''நான் என்னை அப்படிச் சொல்லிக் கொண்டேனா...?''

''வாய்விட்டுச் சொன்னால்தானா...? நீ காட்டுகிற பிலிம் அந்த ரேஞ்சுக்குத்தானே இருக்கிறது...?''

''அர்ஜுன்...''

''ஹ... புருஷன் பெயரைச் சொல்லிக் கூப்பிடுகிறாயே...''

''ஹலோ... புருஷனின் காலைத் தொட்டுக் கும்பிட்டுக் கொண்டதெல்லாம் அந்தக் காலம்...''

''இப்போ... புருஷனின் தலையில் கல்லைத் தூக்கிப் போடுகிற காலமா? நீ இந்தக் காலத்துப் பெண்ணில்லையா? விளக்கம் சொல்... அடச் சொல்லும்மா...''

'எப்படிப் பேசுகிறான்....' தாஷிணிக்கு கண்கள் கலங்கி விட்டன. அவள் கண்களில் நீர் மல்க அவனைப் பார்த்தாள்.

அவளது விழி நீரைக் கண்டதும் அவனுக்குள் இனம்புரியாத திருப்தி முளைத்தது

'ஒரு வார்த்தை சொன்னால் தாங்கிக் கொள்ள மாட்டேன் என்கிறாளே... இவளுக்கு என்மேல் புருஷன் என்ற உணர்வு இல்லாமல் இல்லை... அப்புறம் ஏன் இப்படி நடிக்கிறாள்...?'

தாஷிணி உற்சாகம் இழந்தவளாய் அவனுடன் அறைக்குத் திரும்பினாள்.

''ஹூம்... சென்னைக்கும், கோவாவுக்கும் என்னடி பெரிய வித்தியாசம் இருக்கு...?''

''எனக்கு சொல்லத் தெரியவில்லை. அதையும் நீங்களே சொல்லி விடுங்கள்.''

''அங்கேயும் கட்டிலின் அந்த ஓரமாய் நானும்... இந்த ஓரமாய் நீயும்



படுக்கப் போகிறோம். அதற்கு எதற்கு வெட்டியாய் காசை செலவு பண்ணி கோவாவுக்கு வரவேண்டும்.''

அவள் முகம் சிவக்க... முகம் திருப்பிக் கொண்டாள்.

'உன்னை யார் கட்டிலின் அந்த ஓரத்திலேயே இருக்கச் சொன்னது...? தேவையென்றால் என்னைத் தேடி வர மாட்டாயா? உனக்கு நான் தேவையில்லை. இவளில்லாமல் வேறு ஒருத்தியின் கழுத்தில் நாம் தாலி கட்டியிருந்தால் இந்த தேன்நிலவை நாம் என்ஜாய் பண்ணியிருக்கலாமே என்று நினைக்கிறாய். அதைச் சொல்ல மாட்டாமல்தான் இந்தப் பொருமல்... பொறுமுகிறாய்...'

அவளது மனம் படும் பாட்டை அவன் வேறுவிதமாகப் புரிந்து கொண்டான்.

'உடனே முகத்தைத் திருப்பிக் கொள்... ஏன்... என் முகத்தைப் பார்க்க பிடிக்கவில்லையா...? உனக்கு நான் தேவையில்லையா...? நான் கட்டிய தாலிக்கு மட்டும் அவ்வளவு மதிப்புக் கொடுக்கிறாயே... என் உணர்வுகளையும் அதுபோல மதிக்க மாட்டாயா...? ஏன், கட்டிலில் படுத்திருப்பவள்... தூக்கத்தில் கூட என் மேல் கை போட மறுக்கிறாய்...? உன்னிடமிருந்து ஒரு சிறு பார்வை வந்தால்கூட எனக்குப் போதுமே... அந்தப் பார்வையால் அழைக்கக்கூட நீ மறுக்கிறாயே... அப்புறம் ஏன் புருஷனென்று உருகுகிறாய்? ஊருக்காகவா...? உறவுக்காகவா....? உனக்காக இல்லையா....? எனக்காக நீ இல்லையா...?'

அந்த இரண்டு முட்டாள்களும், மனதில் நினைப்பதை வாய்விட்டுச் சொல்லியிருந்தால்... அந்த தேன்நிலவு இன்பமாகக் கழிந்திருக்கும். அவர்கள் அதைச் செய்யவில்லை. நினைப்பதையெல்லாம் வாய்விட்டுச் சொல்ல... ஏனோ மனித ஜீவன்களுக்கு வாய்ப்பதில்லை.

அவள் வாய்க்குள் எதையோ முணுமுணுத்தாள். அவளைத் தொட்டு ஆள முடியாத தாபத்துடன் இருந்தவன் கோபம் கொண்டான்.

''என்னடி வாய்க்குள் முணுமுணுக்கிற... எதையும் வெளிப்படையாய் பேசி உனக்குப் பழக்கமில்லையா...?''

''வேண்டாம் அர்ஜுன்...''

''எது வேண்டாம்...? நான் உனக்கு வேண்டாமா? வேறு யார் உனக்கு வேண்டும்?''

''அர்ஜுன்...''

''ஏண்டி கத்துகிற...? நீ என்ன முணுமுணுத்தாய்? அதைச் சொல்லு

முதலில்...''

''வெட்டியாய் பணத்தை செலவழித்து என்னை கோவாவுக்கு அழைத்துக் கொண்டு வாங்கன்னு நான் உங்களிடம் கெஞ்சினேனா... இல்லை ஜாடை மாடையாய் சொன்னேனா...?''

'அதையெல்லாம் நீ செய்ய வேண்டும் என்றுதானே நான் எதிர்பார்க்கிறேன். ஆனால் கல்லுளி மங்கி... நீ அதைச் செய்து விடுவாயா...?'

அவன் கோபத்துடன் முகம் கருத்தான்.

''இப்போ நீ என்னதான் சொல்ல வருகிறாய்...?''

''நீங்க கூப்பிட்டீங்க... நான் உங்க பின்னால் வந்தேன்...''

அவளது வார்த்தையில்... 'நீ படுக்கையில் அழைத்திருந்தால் நான் உன் பக்கத்தில் வந்திருப்பேன்...' என்ற மறை பொருள் தொனித்தது.

அவனோ... 'கடமைக்காக நான் உன் பின்னால் வந்தேன்...' என்று அவள் சொல்வதாக நினைத்துக் கொண்டான். அவனுக்கு கோபம் தலைக்கேறி விட்டது.

''ஸோ... தாலி கட்டிவிட்ட கடமைக்காக என் பின்னால் வந்தவள் நீ...''

'எதைச் சொன்னால்... எப்படிப் பொருள் கொள்கிறான் பார்' அவளது மனம் பொருமியது.

''ஆமாம்... இப்ப அதுக்கு என்னங்கறீங்க..?''

''அப்படியே... சுடிதார் போட்ட பேட்டை ரவுடிதாண்டி நீ...''

''நீங்கள் மட்டும் யார்...? ஜீன்ஸ் போட்ட பேட்டை ரவுடிதானே? என்னைச் சொல்ல வந்துவிட்டீங்களா?''

''ஆமாமாம்... நான் ஒரு வார்த்தை சொன்னால் நீ பதினைந்து வார்த்தைகளைத் திருப்பிச் சொல்லு. விளங்கி விடும்.''

''அந்த ஒரு வார்த்தையைச் சொல்லாமல் வாயை அடக்கி இருக்க உங்களால் முடியாதா...?''

''என்னை அடக்குவதிலேயே குறியாய் இருக்கிறாய்...''

அடங்க மறுத்த உணர்வுகளை அடக்கப் போராடிக் கொண்டிருந்தவன்... மனதின் தாகத்தோடு கேட்டான்.

''நீங்களும் என்னை அடக்க வேண்டியதுதானே... யார் உங்களை தடுத்ததாம்...''

அவள் மீண்டும் அவனை அழைக்கும் வார்த்தைகளைக் கூறினாள்... ஆனால் அது அவனது மரமண்டையில் ஏறாமல் அவன் சண்டையை



வளர்ப்பதிலேயே குறியாக இருந்தான். தர்ஷிணியின் மனம் வலித்தது.

'இவன் என்னைப் புரிந்து கொள்ளவே மாட்டானா... கிட்ட நெருங்கி வரவே மாட்டானா... வாழ்நாளெல்லாம் இப்படி இவனுக்காக நான் மறுகி நிற்பதிலேயே கழிந்து விடுமா...?'

அவர்கள் இரவு சாப்பிடப் போகையில் மௌனமாகவே போனார்கள். அறையின் இதமான மெல்லிய வெளிச்சத்தில்... எதிரே முகத்தில் சோகம் ததும்ப அமர்ந்திருந்தவளைப் பார்க்கும் போது... ஒரு தேவதையின் கோட்டுச் சித்திரத்தைப் பார்ப்பது போலவே அவனுக்கு இருந்தது. அந்த ஏசி ஹால் முழுவதும் மெல்லிய ஆங்கில இசை நிறைந்திருந்தது... அவன் மனதில் இதம் பரவியது.

அவளை அவன் விரும்பினான். அவளது இந்த அருகாமையில் மனம் குளிர்ந்தான். அழகான தேவதையைப் போன்ற மனைவி கிடைக்க தான் கொடுத்து வைத்திருக்க வேண்டும் என்று அவன் நினைத்துக் கொண்டான்.

அவளோ, அவன் தன்னை வெறுப்புடன் பார்த்துக் கொண்டிருப்பதாக நினைத்துக் கொண்டு பார்வையைத் தாழ்த்திக் கொண்டாள்.

## 7

''தர்ஷிணி...'' அவன் மென்மையான குரலில் அவளை அழைத்தான்.

'இவனா... இப்படி ஸாஃப்டாய் அழைக்கிறான்...' தர்ஷிணி ஆச்சரியத்தோடு விழி உயர்த்தி அவனைப் பார்த்தாள்.

''நீ என்னை விட்டு வேறு ஒருவனைக் கல்யாணம் பண்ணிக் கொண்டிருந்தால் இந்த தேனிலவை எவ்வளவு ஜாலியாக என்ஜாய் பண்ணியிருப்பாய்...?''

இது ஒருவகையான தூண்டில்... 'ஏன் நீ என்னுடன் ஜாலியாக இருக்க மறுக்கிறாய்...?' என்ற கேள்வி... 'என்ஜாய் பண்ண உனக்கு விருப்பமில்லையா' என்று அறியத்துடிக்கும் ஆவல்...

ஆனால்... உடைந்து போன மன நிலையில் இருந்த தர்ஷிணி இந்தக் கேள்வியால் இன்னும் உடைந்து போனாள்.

'இதற்கு என்ன அர்த்தம்? நீ என் மனைவியாக வராமல் வேறு ஒருத்தி எனக்கு மனைவியாக இருந்திருந்தால் இந்நேரம் நான் தேனிலவை

என்ஜாய் பண்ணியிருப்பேன்...' என்று இவன் சொல்லாமல் சொல்கிறான்.'

''என்னடி... பதில் சொல்ல மாட்டேன் என்கிறாய்...''

''இப்போது இதைப் பற்றிப் பேச வேண்டாம்...''

''ஏன்...?''

''வேண்டாமென்றால் வேண்டாம்... விட்டு விடுங்கள்...''

''யாரை விடச் சொல்கிறாய்? உன்னையா...?''

அவன் விழி 'என்னால் அது முடியுமா?' என்று கேட்டது. அவள் மனமோ... 'அதற்காகத்தானே துடித்துக் கொண்டிருக்கிறாய்?' என்று பதிலுக்குக் கேட்டது.

என்ன ஒன்று... மனம் பேசுவதை உணர்ந்து கொள்ளவும் ஒரு மனம் வேண்டும்.

அது அந்த இருவரிடமும் இல்லாமல் போய் விட்டது. அவர்கள் ஒருவர் பேசும் வார்த்தையை மற்றொருவர் தவறாகப் புரிந்து கொள்வதிலேயே குறியாக இருந்தார்கள்.

''அர்ஜுன்... சாப்பிடும் இடத்தில் சண்டை போட வேண்டாம்.''

'ஆமாம்டி... நான் எது பேசினாலும் உனக்கு சண்டையாகத்தான் தெரியும். என் மனதைப் புரிந்து கொள்ளாமல் மண்டூகமாகவே இரு.'

''நீ கொட்டிக் கொள்வதிலேயே குறியாய் இரு...''

''இப்போது நீங்கள் வாங்கிக் கொடுத்திருக்கும் இந்த அயிட்டங்களை விட என் அம்மா சூப்பராக சமைத்துத் தருவாங்க.''

''அப்படியானால் நீ உன் வீட்டிலேயே இருந்திருக்கலாம் என்று ஏங்கிக் கொண்டிருக்கிறாயோ...?''

''நீங்கள் வாங்கிக் கொடுக்கும் இந்தச் சாப்பாட்டை நொட்டை விட்டுக் கொண்டு சாப்பிடுவதிலேயே... நான் குறியாய் இருப்பதாக என்னிடம் சொல்லியது யார்...? நீங்கள்தானே...''

''நான் வாங்கிக் கொடுக்கும் சாப்பாடு? ம்ம்... இங்கே இப்படிச் சொல்வாய்... சென்னைக்குப் போனதும் எப்படிச் சொல்வாய்...? ம்ம்...?''

''நீங்கள் போடும் சாப்பாடுன்னு சொல்வேன்... அதுதானே உண்மை.''

'ஏண்டி... நீ எவனோ ஒருத்தியா...?' என்று கேட்டுவிட அவன் மனம் துடித்தது.

ஆனால் அவன் அதைக் கேட்காமல் எழுந்து கொண்டான். அப்படி அவன் கேட்கமாட்டானா... என்று தவித்துக் கொண்டிருந்தவள் ஏமாற்றமாய் உணர்ந்தாள்.



இருவரும் மௌனமாக அறைக்குத் திரும்பினார்கள். எப்போதும் போல கட்டிலின் ஒரு முனையில் அவள் படுக்க... மறுமுனையில் எரிச்சலோடு அவன் படுத்தான்.

இடையில் இருக்கும் இடைவெளி... அவர்கள் புரண்டு படுத்தால் ஒட்டிக் கொள்ளும் தூரம்தான். ஆனால் அவர்களுடைய மனதில் இருக்கும் இடைவெளிதான் அவர்களால் கடக்க முடியாத தொலைவுடன் இருந்தது.

விழி மூடிப் படுத்திருந்த மனைவியின் கோலம் அவனை 'வா...'வென்று அழைத்தது. அவள் மனதில் அவன் இல்லையென்ற எண்ணம் அவனைத் தடுத்தது. அர்ஜுன் அவஸ்தைக்கு ஆளானான்.

தாக்ஷிணி எழுந்தாள்... அவசரமாய் அவன் திரும்பிப் படுத்து அவளைப் பார்த்தான். அவள் தண்ணீர் பாட்டிலை எடுத்து தண்ணீரைப் பருகினாள். மீண்டும் படுத்தாள். விழிமூடிக் கொண்டாள்.

'ம்ஹூம்...' அவன் மனதில் பெருமூச்சு எழுந்தது.

''தாக்ஷிணி...''

''ம்ம்...''

''தூங்கி விட்டாயா...?''

'தூங்குபவள் எப்படிப் பதில் சொல்வேன்...' அவளுக்குள் எரிச்சல் பரவியது.

''இல்லை...''

''எனக்கும் தூக்கம் வரவில்லை.''

''ம்ம்...''

''என்ன செய்யலாம்...?''

''புரியவில்லை...''

'உனக்கு எல்லாம் புரிந்து விடும். இதுமட்டும் புரியாது.'

''பேசிக் கொண்டிருக்கலாமா...?''

''அதாவது சண்டை போடலாமான்னு கேட்கறீங்க...''

''உனக்கு சண்டை போட்டுக் கொண்டே இருக்க வேண்டும்.''

''என்ன செய்வது? பழக்கதோசம்.... எல்.கே.ஜி.யில் ஆரம்பித்து ப்ளஸ் டூ வரை போட்ட சண்டையாச்சே. அவ்வளவு சீக்கிரம் விட முடியுமா...?''

''விடாதே... அதைப் பிடித்துக் கொண்டே தொங்கு.''

''ஏன் கோவப்படுகிறீங்க...?''

''நீ பேசும் லட்சணத்திற்கு உன்னைக் கொஞ்ச முடியுமா?''

அவன் வார்த்தைகளில் அவளைக் கொஞ்ச வேண்டும் என்ற ஆவல்

தெரிந்தது. அவள் மௌனமாக விழி மூடினாள்.

''என்னடி பேசலைக் காணோம்...''

''என்ன பேச...?''

''ஏன்... உனக்கு பேசத் தெரியாதா? வாயைத் திறந்தால் மூட மாட்டாயே...''

''நடு இரவில் எழுப்பி வம்பிழுத்தால்... எனக்கு பேச்சு எப்படி வரும்?''

''வேறு என்னதான் வரும்...?''

அவன் அவளைத் தாகத்துடன் பார்த்தான். அவள் உதடு கடித்துக் கொண்டாள். அவனது அருகாமையும்... தேன்நிலவின் தனிமையும் அவளுக்குள் மோகத்தீயை பற்ற வைத்தது. அவள் அவனுடன் சரஸமாட விரும்பினாள்.

''ம்ம்... பாடத்தான் வரும்...''

''அதுதானே... நீ பெரிய பாடகியாச்சே... பாடு... பாடு...''

**''பொன்மேனி தழுவாமல்...**
**பெண் இன்பம் அறியாமல்...**
**போக வேண்டுமா...**
**கண்ணோடு கண் சேர...**
**உன்னோடு நான் சேர...**
**தூது வேண்டுமா...''**

அவள் பாடி விட்டாள். மனதிலிருப்பதை மிக அழகாக பாடல் வரிகளால் உணர்த்தி விட்டாள். அவன் பேச்சிழந்தான். அந்த பாடல் கூறியதை நம்ப முடியாமல் திகைத்தான்.

'இவள் உண்மையாய் உணர்ந்துதான் பாடுகிறாளா...' - அவன் மனம் ததும்பியது. அவன் அவள் புறமாய் திரும்பிப் படுத்தான். அவளும் இப்போது அவன் பக்கம் திரும்பி இருந்தாள். இருவரும் ஒருவரையொருவர் பார்த்துக் கொண்டனர். அவள் பாடலைத் தொடர்ந்தாள்.

**''இரவென்பது என் வாழ்விலே...**
**நீ இல்லாமல் போகுமா...''**

அர்ஜுன் புரண்டு அவளருகில் வந்தான். அவளது குரல் தந்த மயக்கம் அவனை ஆட்கொள்ள... அவளைத் தொட்டுத் தன்பக்கம் இழுத்தான். தர்ஷிணி பேச்சிழந்தாள்.



அவளது மௌனம்... சம்மதத்தைக் கூறிவிட அர்ஜுனின் உணர்வுகள் கட்டவிழ்த்துக் கொண்டன. அவன் அவளைத் தன்னோடு ஆவேசமாய் இறுக்கிக் கொண்டான். தர்ஷிணி விலகாமல் அவனது அணைப்பினில் அடங்கினாள்.

தன் கைக்குள் அடங்கியிருந்தவளின் முகம் பற்றி அவளின் நெற்றியில் முத்தமிட்டான். குனிந்து அவளின் கன்னத்தில் முத்தமிட்டான். தழுவிக் கொண்டான். அவர்கள் மோக வெள்ளத்தில் அடித்துச் செல்லப்பட்டனர்.

**''கன்னத்தில் முத்தமிட்டால் - உள்ளம்தான்**
**கள்வெறி கொள்ளுதடி...**
**உன்னைத் தழுவிடிலோ - கண்ணம்மா**
**உன்மத்தம் ஆகுதடி...''**

- அவளது காதோரம் முண்டாசுக் கவிஞர்... முடிகோதி பாரதியாரின் பாடல் சொன்னான் அர்ஜுன். அவளுக்குள் மூழ்கி விடும் துடிப்போடு அவளது இதழோடு இதழ் பதித்த போது... தர்ஷிணியின் செல்போன் மணி ஒலித்தது.

அவள் அவனிடமிருந்து விலக மனமின்றி விலகி செல்போனை எடுத்தாள். அவளுடைய அம்மா சரோஜாவின் குரல் மறுமுனையில் அழுகையுடன் ஒலித்தது.

''தர்ஷிணி...''

''அம்மா... என்னம்மா... ஏன் அழுகிறீங்க...?''

''உன் அப்பாவுக்கு ஹார்ட் அட்டாக்... ஹாஸ்பிட்டலில் சேர்த்திருக்கிறோம். ஐ.சி.யு.வில் வைத்திருக்கிறாங்க... எனக்கு ரொம்ப பயமாய் இருக்குடி...''

''என்னது...''

தர்ஷிணி பதறி எழுந்தாள். அவளது மனதில் இருந்த உணர்வுகள் கண் சிமிட்டும் நேரத்தில் மாயமாய் மறைந்தன. அவள் என்ன பேசிக் கொண்டிருக்கிறாள் என்று கேட்காதவனாய் கட்டிலில் கிறக்கமாய் அவளைப் பார்த்துக் கொண்டே படுத்திருந்த அர்ஜுன்... அவளது கரம் பற்றி இழுத்தான். அவள் அவன் மேல் விழுந்தாள். அவனது கரங்கள் அவளை வளைத்துக் கொண்டன. அவளது இதழ் தேடி அவன் தவிக்க... அவள் துடித்துப் போய் விட்டாள்.

'என்ன மாதிரியான நேரத்தில் இவன் என்ன செய்ய நினைக்கிறான்...'

''ச்சே...'' தன்னையுமறியாமல் அவனை உதறிவிட்டு எழுந்தவளின் வாய் இந்த வார்த்தையை உச்சரித்து விட்டது.

அவ்வளவுதான்... அவன் கொதித்துப் போய் எழுந்து அவள் கன்னத்தில் 'பளார்' என்று அறைந்து விட்டான். அவன் உடலில் இருந்த கிளர்ச்சி காணாமல் போய்விட - பொங்கி வெடித்தான்.

"என்னடி நினைத்துக் கொண்டிருக்கிறாய்...? நான் என்ன உனக்காக ஜொள்ளு விட்டுக் கொண்டு இருந்தேனா? இல்லை உன் விருப்பமில்லாமல் உன்னைத் தொட்டேனா? நீ எப்படி அந்த வார்த்தையை என்னைப் பார்த்துச் சொல்லலாம்?"

கன்னத்தை பிடித்துக் கொண்டு நின்ற தர்ஷிணிக்கு தன் தவறு புரிந்தது. ஆனால் சில நேரம் உணர்ச்சிப் பெருக்கில் நாம் என்ன பேசுகிறோம் என்பதை அறியாமல் விடும் வார்த்தைகள்... நம் தலைவிதியை மாற்றி விடுகின்றன. தர்ஷிணியும் அதுபோல்தான்... தெரியாமல் ஒரு வார்த்தையை விட்டு விட்டாள்.

## 8

வள்ளுவர் என்னவோ எளிதாக சொல்லி விட்டார். 'யாகாவாராயினும் நா காக்க...' என்று... ஆனால் யோசித்து ஒவ்வொரு வார்த்தைகளாக பேசிக் கொண்டிருந்தால் அது பேச்சாக இருக்குமா?

மனது நினைப்பதை தயங்காமல் பேசிவிட வேண்டும். அதுதான் பேச்சு. அதைவிட்டு... செயற்கையான நாகரீகப் பூச்சோடு வெளிவரும் வார்த்தைகளில் இயல்பு இருக்காது. இயல்பான வார்த்தைகள் இதயத்திலிருந்து வரும்.

தந்தை உடல் நலம் இல்லாமல் உயிருக்கு போராடிக் கொண்டிருக்கும் செய்தியை தர்ஷிணி உடனே தன் கணவனிடம் சொல்லியிருக்க வேண்டும். சொல்லியிருந்தால் அவன் காதல் செய்ய நினைத்திருக்க மாட்டான்.

அதைச் சொல்ல முயலுமுன் அவன் தொட்டுவிட... அவள் பட்டென்று வார்த்தையை விட்டு விட்டாள். அர்ஜுனின் மனதில் அது ஆறாத ரணமாக பதிந்து விட்டது.

"ஐ ஆம் ஸாரி..."

"இது ஸாரி சொல்வதால் சரியாகும் வார்த்தையில்லை..."

"போனில் அம்மா பேசினாங்க..."

"ம்ம்ம்..."



"அப்பாவுக்கு ஹார்ட் அட்டாக்காம்... ஐ.சி.யு.வில் வைத்திருக்கிறாங்களாம்..."

"வாட்...?"

அர்ஜுன் அறை விளக்கைப் போட்டான். துணிகளையும் மற்ற பொருள்களையும் சேகரித்துக் கொண்டே செல்போனில் டிராவல் ஏஜென்டியை அழைத்து டிக்கெட்டிற்கு ஏற்பாடு செய்தான். செல்போனை அணைத்து விட்டு அவளைப் பார்த்தான்.

"கிளம்பு..." என்றான் ஒற்றைச் சொல்லாய்...

"அர்ஜுன்..." அவள் விழிகள் ததும்பின...

"அர்ஜுன்... ப்ளீஸ்..."

"இன்னும் அரை மணி நேரத்தில் டிரெயின்... நாம் ஓடிக் கொண்டே இருக்க வேண்டும்."

அவள் பேச்சைக் கத்தரித்து விட்டு... ரூம் சர்வீஸை போனில் அழைத்து ரூமைக் காலி செய்வதைப் பற்றிச் சொன்னான். பெட்டிகளோடு... அறையை விட்டு வெளியேறினான். தர்ஷிணி ஓட்டமும் நடையுமாய் அவனைப் பின்தொடர்ந்தாள்.

அடுத்த அரை மணி நேரத்தில் சென்னையை நோக்கிச் சென்று கொண்டிருந்த ரயிலில் அவர்கள் இருவரும் பயணம் செய்து கொண்டிருந்தார்கள்.

வழியில் அர்ஜுன் தர்ஷிணியை நிமிர்ந்து கூடப் பார்க்கவில்லை. வார இதழ் ஒன்றில் பார்வையைப் பதித்தவன்... பதித்தவன்தான்.

தர்ஷிணியாலும் அவனிடம் பேச இயலவில்லை. மனம் பூராவும் தகப்பனின் உடல் நிலையைப் பற்றிய கவலை மேலோங்கியிருந்த போது அவளால் பேச முடியவில்லை.

சென்னையில் போய் இறங்கியதும்... வீட்டுக்குப் போகாமல் அவளை நேராக - கிருஷ்ணன் அனுமதிக்கப்பட்டிருந்த மருத்துவமனைக்கே அழைத்துச் சென்றான் அர்ஜுன்.

"அம்மா..." தாயைக் கண்டதும்... கணவனைப் பற்றிய நினைவை மறந்து அருகில் ஓடினாள் தர்ஷிணி.

"தர்ஷிணி... வந்து விட்டாயா..."

"அப்பாவுக்கு எப்படிம்மா இருக்கு...?"

"இன்னும் கண் விழிக்கலை..."

அப்போதுதான் அருகே நின்று கொண்டிருந்த அர்ஜுனைப் பார்த்தாள் சரோஜா. அவசரமாய் எழுந்து நின்றாள்.

"எப்போ ஹார்ட் அட்டாக் வந்தது...?" அர்ஜுன் விசாரித்தான்.

தன்மையாய் விசாரித்தான்.

"நேற்றைக்கு வழக்கம்போல் ஆபீஸ் போனார் மாப்பிள்ளை... கொஞ்ச நேரத்தில் ஆபீஸிலிருந்து போன் வந்தது. இவர் நெஞ்சு வலின்னு சொல்லி... ஆபிஸிலேயே மயக்கம் போட்டு விட்டாராம். அவங்க ஹாஸ்பிட்டலில் அட்மிட் பண்ணி விட்டு எனக்குப் போன் பண்ணினாங்க." சரோஜா அழுகுரலில் விவரம் கூறினாள்.

தாயின் அருகில் நின்று கொண்டிருந்த – தர்ஷிணியின் பதினேழு வயதான தம்பி தருணைப் பார்த்தான் அர்ஜுன்.

மேல்நிலைப் பள்ளியில் இரண்டாம் ஆண்டு படிக்கும் மாணவன். அவன் விழிகளில் பயம் தெரிந்தது. அர்ஜுன் கனிவோடு அவன் தோளில் கை போட்டுக் கொண்டான்.

"சாப்பிட்டாயா தருண்...?"

அவன் பதில் சொல்லாமல் தாயைப் பார்த்தான்.

"நீங்க சாப்பிட்டிங்களா அத்தை...?"

அவள் பொங்கி வரும் அழுகையை அடக்கியபடி பேசினாள். "மாப்பிள்ளை...! அவர் கண் விழிக்காமல் நான் சாப்பிட மாட்டேன்."

"ம்... டாக்டர் என்ன சொல்கிறார்?"

"எதுவும் சொல்ல முடியாது என்கிறார்..."

அர்ஜுன் தலைமை மருத்துவரின் அறைக்குப் போய் அவரைப் பார்த்துப் பேசினான்.

"சிவியர் ஹார்ட் அட்டாக்... பட்... இதுதான் முதல் அட்டாக் என்பதால் அவ்வளவாய் பயமில்லை. எதற்கும் ஒரு ஆறுமணி நேரம் கழியட்டும்... பார்ப்போம்."

அர்ஜுன் வீட்டிற்குப் போன் பண்ணினான்.

"அர்ஜுனா... கோவா எப்படியிருக்கு...?" என்றார் வேதாச்சலம்.

"கோவா நல்லாத்தான் இருக்கு. இங்க உங்க சம்பந்திதான் நல்லா இல்லை."

"இங்கேயா...? இங்கேன்னா எங்கே...? நீ என்னடா சொல்கிறாய்? இப்போது எங்கேதான் இருக்கிறாய்?"

"ம்... சென்னையில் இருக்கிறேன்... வந்து இரண்டு மணி நேரமாகிறது..."



"இவ்வளவு நேரமாக வீட்டிற்கு வராமல் எங்கே இருக்கிறாய்? அது சரி... கோவாவில் பதினைந்து நாள் தங்கப் போகிறேன்னு என்னிடம் வாக்குக் கொடுத்து விட்டுத்தானே கோவா போனாய்... ஆறே நாட்களில் திரும்பி ஓடி வந்திருக்கிறாயே... இதுதான் நீ வாக்குக் கொடுக்கும் லட்சணமா? ஏன்டா... அந்தப் பெண் அறியாப் பெண்... அது என்ன பாவம் பண்ணியதுன்னு தேனிலவைக் கால்வாசியில முடித்துக் கொண்டு நீ சென்னைக்கு ஓடி வந்தாய்?"

"பேசி முடிச்சிட்டீங்களா... அப்பா... வாக்குத் தவறுவதைக் கேட்கும் நேரமா இது? நான் இப்போது தர்ஷிணியின் அம்மாவோடும்... தம்பியோடும் பேசிக் கொண்டிருக்கிறேன்..."

"அடப்பாவி... அவ்வளவு தூரத்திற்கு வந்து விட்டாயா? ஏன்டா... கல்யாணமாகி இன்னும் முழுதாய் ஒரு மாதம் கூட ஆகவில்லை. அதற்குள் உன் பெண்டாட்டி உன்னை முந்தானையில் முடிந்து கொண்டாளா...? தேன்நிலவு கொண்டாட கோவாவை விட மாமனார் வீடே பெட்டர்னு அங்கே போய் செட்டிலாகி விட்டாயா? இந்த வேதாச்சலம் பெற்ற பிள்ளை இப்படியொரு காரியத்தைச் செய்யலாமா?"

"ஏன்ப்பா... இப்பத்தான்... அவளை அறியாப் பெண்... அது இதுன்னு சொன்னீங்க. இப்ப என்னடாவென்றால் அவள் முந்தானையால் என்னை வலை வீசிப் பிடித்தாள்ன்னு சொல்றீங்க. இது உங்களுக்கே ஓவராகத் தெரியவில்லையா?"

"இப்ப என் பாடு உனக்குப் புரியாதுடா... நாளைக்கு உனக்கும் ஒரு மகன் பிறப்பான்..."

"அவன்... என்னைப் போலவே இருப்பான். இப்போது அதை விட்டுவிட்டு நான் சொல்ல வந்ததைக் கொஞ்சம் கேட்கறீங்களா...?"

"என்னடா சொல்லப் போற...?"

"தர்ஷிணியின் அப்பாவிற்கு ஹார்ட் அட்டாக்..."

"யாரு... கிருஷ்ணனுக்கா...?"

"தர்ஷிணியின் அப்பா பெயர் கிருஷ்ணன்தானே..."

"அடப்பாவமே... எப்பவாம்...? இப்ப எந்த ஹாஸ்பிட்டலில் இருக்கிறார்...?"

அர்ஜுன் விவரம் சொல்லிவிட்டு... போனை அணைத்து விட்டு அங்கிருந்த சேரில சரிந்து உட்கார்ந்தான்.

**ச**ற்று நேரத்தில் வேதாச்சலமும், தமிழ்செல்வியும் வந்து விட்டனர். வந்த வேகத்தில் சரோஜாவை ஒரு பிடி பிடித்தாள் தமிழ்செல்வி.

''என் அண்ணி... எங்கேயோ... கோவாவில் இருக்கிற என் மகனுக்கு தகவல் கொடுத்து வரவைக்க உங்களுக்குத் தெரியுது. இந்தா இருக்கிற மாம்பலத்தில் இருக்கும் எங்களுக்கு ஒரு போனைப் போட்டு வரவைக்கணும்கிற நினைப்பு இல்லையா?''

''இல்லை அண்ணி... உங்களையேன் தொந்தரவு செய்யணும்னுதான்...'' சரோஜா கையைப் பிசைந்தாள்.

''இதில் என்ன அண்ணி தொந்தரவு இருக்கு. மனிதருக்கு மனிதர் ஆபத்துக் காலத்தில் உதவி செய்துக்கலைன்னா... அவங்க சொந்த பந்தம்ன்னு சொல்லிக்கிறதில அர்த்தம் என்ன இருக்கு? சொந்த பந்தம் எதுக்கு இருக்கு? ஆபத்து காலத்தில் உதவத்தான் இருக்கு. அப்படி ஆபத்தில் கை கொடுக்கலைன்னா... அவங்கள சொந்தம்ன்னு சொல்லிக்கிறதில் அர்த்தமே இல்லை அண்ணி...''

ஆறு மணி நேரம்... சரோஜாவோடு எல்லோருமே அன்னம்... ஆகாரம் இல்லாமல் கிடந்தார்கள். ஆறு மணி நேரம் கழிந்தது... கிருஷ்ணன் கண் விழித்தார்.

''இனிப் பயப்பட ஒண்ணும் இல்லை. இன்னொரு ஹார்ட் அட்டாக் வராமல் பார்த்துக்கங்க.''

தமிழ்செல்வி அதட்டி உருட்டி... சரோஜாவை சாப்பிட வைத்தாள். அர்ஜுன், தருணை ஹோட்டலுக்கு அழைத்துச் சென்று டிபன் வாங்கிக் கொடுத்தான். இரவானதும்... வீட்டுக்கு கிளம்ப முனைந்த போது தர்ஷிணி தயங்கி நின்றாள்.

''அத்தை...''

''என்னம்மா...''

''நான் அம்மாவோடு இருந்து விட்டு வருகிறேன்.''

அர்ஜுனின் பார்வை மின்னலாய் அவள் மீது படிந்து விலகியது. ஏதோ மறுத்துச் சொல்லப்போன தமிழ்செல்வியை அவன் குரல் தடுத்து நிறுத்தியது.

''அம்மா... அவள் இங்கேயே இருக்கட்டும்.''

''இல்லைடா அர்ஜுன்...''

''ஸ்ஸ்... இருக்கட்டும்ன்னு சொல்கிறேனில்லை. விடுங்க... தருண்... நீ



எங்களோடு வா. காலையில அங்கிருந்தே ஸ்கூல் போய்க் கொள்...''

அவன் பொறுப்பான அக்கா கணவனாக மைத்துனனை தங்களுடன் அழைத்துக் கொண்டு கிளம்பினான். ஆனால் மறந்தும் மனைவியை திரும்பிக்கூடப் பார்க்கவில்லை.

# 9

**அ**லுவலகத்தில் அர்ஜுனை எல்லோரும் ஆச்சரியமாகப் பார்த்தார்கள். தங்களுக்குள் கிசுகிசுத்துக் கொண்டார்கள்.

''என்ன... எம்.டி.சார் பாதியிலேயே லீவைக் கேன்சல் செய்து விட்டு ஜாயின் பண்ணியிருக்கிறார்?''

''அதுதானே... அதுவும் தேனிலவில பாதியிலேயே யாராவது திரும்பி வருவாங்களா...?''

அதையேதான் அர்ஜுனின் நண்பன் கோகுல் கேட்டான்.

''ச்ச...'' என்று அலுத்துக் கொண்டான் அர்ஜுன்.

''என்டா... நீ ஏற்கனவே முகத்தைத் தூக்கி வைத்துக் கொண்டுதான் கல்யாணமே பண்ணிக்கிட்ட... இப்ப என்னடான்னா இப்படிப் பாதியிலேயே தேனிலவை விட்டுவிட்டு ஓடி வரலாமா?''

''என்டா... எனக்கு மட்டும் ஆசையா...?''

''பின்னே... உன் மனைவிக்கு வந்த ஆசையா?''

''இரண்டும் இல்லை. என் மாமனாருக்கு வந்த ஹார்ட் அட்டாக்கிற்கு வந்த ஆசை.''

''அடப்பாவமே... உன் வொய்ஃப் இப்போது எங்கே...?''

''அவளுடைய அம்மாவிற்கு துணையாக ஹாஸ்பிட்டலில் இருக்கிறாள்.''

''த்சொ... த்சொ...''

''என்டா இவ்வளவு தூரம் பரிதாபப் படுகிறாய்...?''

''கடைசியில் உன் நிலைமை இப்படி ஆகிவிட்டதே...''

''நீயெல்லாம் என்மேல் இரக்கப் படுகின்றாயானால் நிச்சயம் என் நிலைமை பரிதாபத்துக்கு உரியதுதான்.''

கோகுல் எழுந்து போனபின்... அர்ஜுன் கம்ப்யூட்டரை உயிர்ப்பித்து மெயில் பாக்ஸை திறந்தான். வந்திருந்த மெயில்களைப் பார்வையிட்டான். அதில் ஒரு மெயில்...

ஹாய் அர்ஜுன்...

நான் இந்தியா வந்திருக்கிறேன். தாஜ்மஹாலைப் பார்ப்பதற்காக இல்லை... உன்னைப் பார்ப்பதற்காக... எப்போது நான் உன்னிடம் வர...

- மாளவிகா-

- என்று இருந்தது. அர்ஜுனின் புருவங்கள் உயர்ந்தன.

'மாளவிகா... இவள் எப்போது அமெரிக்காவில் இருந்து வந்தாள்...' யோசனையுடன்...

'நீ என்னைப் பார்க்க வர நேரம் காலம் பார்க்க வேண்டுமா...? எப்போது வேண்டுமானாலும் வரலாம் -'

- என்று பதில் மெயிலை அனுப்பி விட்டு... சுழல் நாற்காலியில் சுழன்று திரும்பினான். மேஜையின் மீது இருந்த செல்போனில் செய்தி வந்திருந்தது. எடுத்துப் படித்தான்...

'விடுபட முடியாத உறவுகள் பல
வாழ்க்கையில் உண்டு...
உனக்கும்... எனக்குமான உறவு...
அந்த வகையைச் சேர்ந்தது...'

- தர்ஷிணி கவிதை அனுப்பியிருந்தாள். அர்ஜுன் அதைப் படித்து விட்டு... ஆழமாய் பெருமூச்சு ஒன்றை விட்டான். பதில் செய்தி அனுப்பவில்லை.

அன்று மாலை அவன் அலுவலகம் முடிந்து காரில் ஏறிக் கொண்டிருந்த போது...

"ஹாய்... அர்ஜுன்..." என்றவாறு மாளவிகா ஒரு கால் டாக்ஸியில் வந்து இறங்கினாள்.

"வா... மாளவிகா...." - உற்சாகமாய் வரவேற்றான் அர்ஜுன்.

"நான் கால் டாக்ஸியை அனுப்பி விடவா அர்ஜுன்...?"

"ஓ... யெஸ்... என் காரில் உன்னை டிராப் பண்ணி விடுகிறேன்... வா..."

மாளவிகா கால் டாக்ஸிக்கு பணம் கொடுத்து அனுப்பி விட்டு... அர்ஜுனின் காரில் ஏறி... அவனருகே அமர்ந்தாள். கார் சாலையின் போக்குவரத்தில் கலந்தது.

"எப்படியிருக்கிறாய் மாளவிகா..."

"அதுதான் நீயே பார்க்கிறாயே... எப்படியிருக்கிறேன்...?"

"உனக்கென்ன மாளவிகா... அழகாகவே இருக்கிறாய்..."

"அப்புறம் என் அர்ஜுன்.... என்னை விட்டு... இன்னொருத்தியை மேரேஜ் பண்ணிக் கொண்டாய்...?"



மாளவிகா சட்டென்று கேட்டுவிட... அர்ஜுன் மௌனமானான். மாளவிகாவே மௌனத்தைக் கலைத்தாள்.

"நீ என்னிடம் காதல் சொன்னதில்லை அர்ஜுன். ஆனால் என்றாவது ஒருநாள் நீ என்னிடம் காதல் சொல்வாய்ன்னு நினைத்தேன்."

"ஐ ஆம் ஸாரி மாளவிகா...!"

"எதற்காக ஸாரி சொல்கிறாய்...? நீ என்னை ஏமாற்றவில்லையே... நானும் உன்னிடம் ஏமாறவில்லையே... என் மனதில் ஓர் எதிர்பார்ப்பு இருந்தால்... நீ எப்படி அதற்கு பொறுப்பாவாய்?"

"என் கல்யாணத்தை என் அப்பா முடிவு பண்ணினார்."

"உனக்கு இதில் விருப்பமில்லையா...?"

அர்ஜுன் பதில் சொல்லாமல் மாளவிகாவைப் பார்த்துப் புன்னகைத்தான்.

"எனக்கு உன்னிடம் பிடித்த விஷயங்களில் இதுவும் ஒன்று அர்ஜுன்."

"எது...?"

"பதில் சொல்ல விரும்பாத போது சிரித்து... அதிலிருந்து நீ தப்பித்து விடுவது...!"

"ஸோ... நான் சிரிப்பதை 'எஸ்கேப்பிஸம்' என்று நீ சொல்லுகிறாய்...?"

"ஹூஹும் உன் 'எஸ்கேப்பிஸம்' எனக்கு பிடித்தமானதாக இருக்கிறது என்று சொல்கிறேன்."

அர்ஜுன் அதற்கும் சிரித்தான். மாளவிகா மீண்டும் பேச்சைத் தொடர்ந்தாள்.

"உன் வொய்ஃபின் பெயர் என்ன அர்ஜுன்?"

"தர்ஷிணி..."

"அழகான பெயர்..."

"அவளும் அழகாகவே இருப்பாள் மாளவிகா..."

"என்னை விடவா அர்ஜுன்?"

'இதற்கு என்ன பதிலைச் சொல்வது? ஒரு பெண்ணிடமோ... இல்லை ஆணிடமோ... உன்னைவிட வேறொருவர் அழகு என்று எப்படிச் சொல்வது?'

அர்ஜுன் மீண்டும் சிரித்துத் தப்பித்தான்.

"உன் டிரேட் மார்க் சிரிப்பைச் சிரித்து விட்டாய்... ஸோ... உன்னிடமிருந்து இனி இதற்கான பதில் வராது..."

"நீ மாறவே இல்லை மாளவிகா... அமெரிக்காவாசம் உன்னை மாற்றவே இல்லை. அன்றைக்கு எப்படிப் பேசிப் பழகினாயோ... அதேபோல் தான்

இன்றைக்கும் பேசிப் பழகுகிறாய்.''

''என் மாற வேண்டும்...நாடு விட்டு நாடு போனால் நான் மாறி விடுவேனா... என் மனம் மாறிவிடுமா? அது அப்படியேதான் இருக்கிறது. எனக்கு இந்தியாவைத்தான் பிடிக்கும். இந்தியாவில் இருக்கும் உன்னைத்தான் பிடிக்கும்.''

இப்போது மீண்டும் அர்ஜுன் சிரித்து வைக்க வேண்டியதாயிற்று.

''அர்ஜுன்...''

''சொல் மாளவிகா...''

''உன் தர்ஷிணியிடமிருக்கும் வேறு அழகுகள் என்ன... என்ன...?''

''ம்ம்... அவள் அழகாக வீணை வாசிப்பாள். அழகாகப் பாடுவாள்.''

''வீணை வாசிப்பதும்... பாடுவதும் திறமையில்லையா...?''

''திறமை வேறு... அழகு வேறு... திறமையை வெளிப்படுத்தும் முயற்சியில் ஞானம் வெளிப்படலாம். அழகு வெளிப்படாது. அழகு என்பது அனுபவித்து அதில் மூழ்குவது... தர்ஷிணி அப்படித்தான். வீணையோ... பாட்டோ... அதில் முழுமையாய் இறங்கி... மூழ்கி விடுவாள்...''

அர்ஜுனின் மனதில் தர்ஷிணி பாடிய பாடல் ஒலித்தது.

**'இரவென்பது... என் வாழ்விலே...**
**நீ இல்லாமல் போகுமா...?'**

அவன் மனம் அன்று அவள் பாடியது போல் அலை பாய்ந்தது.

''அர்ஜுன்...''

மாளவிகாவின் குரல் அவனது மௌனத்தைக் கலைத்தது.

''நீ அவளைக் காதலிக்கிறாயா...?''

''தெரியவில்லை...''

''குட் ஆன்ஸர்...''

''ஈஸிட்...?''

''யெஸ்... இது நீ சொன்னது போல் அழகான பதிலும்கூட... அர்ஜுன்... உன் தர்ஷிணி வேறு எதையெல்லாம் அழகாக செய்வாள்?''

''ம்ம்... அழகாக சண்டை போடுவாள்...''

''வாட்...?''

மாளவிகா ஆச்சரியமாய் அவனைப் பார்த்தாள். அவள் அவனின் கல்லூரித் தோழி. பள்ளிக் காலத்து நிகழ்வுகளைப் பற்றி அவளுக்குத் தெரியாது.

''யெஸ்... அவளும் நானும் எல்.கே.ஜியிலிருந்து ப்ளஸ்டூ வரை சண்டை



போட்டுக் கொண்டிருந்தோம்.''

''இன்ட்ரெஸ்ட்... அப்புறம்...''

''அப்புறம்... நான் காலேஜ் போனேன். பட்டம் வாங்கினேன். சர்வீஸ் கமிஷன் பரீட்சை எழுதினேன். ஸ்டேட் கவர்ன்மெண்டில் பெரிய ஆபிஸராய் ஆனேன்.''

''என்னை மறந்து கை கழுவி விட்டாய். அதையும் சேர்த்துச் சொல் அர்ஜுன்.''

''மாளவிகா... ப்ளீஸ்...''

''ஓ.கே... லீவ் இட்... நாம் தர்ஷிணியிடம் வரலாம். அவளை உன் அப்பா நிச்சயம் பண்ணியவுடன் நீ ஓ.கே. சொல்லி விட்டாயா...?''

''இல்லை...''

''குட்... இதை நான் உன்னிடம் எதிர்பார்த்தேன் அர்ஜுன்... நீ உள்ளதை உள்ளபடி பேசுபவன். என்னிடம் நீ உண்மையை மறைக்கிறாயாவென்று செக் பண்ணினேன். நீ மறைக்கவில்லை.''

''யு ஆர் மை ஃப்ரெண்ட் மாளவிகா...''

''தேங்க்ஸ்... என்னை உன் தோழியாகவாவது ஏற்றுக் கொண்டாயே...''

''ப்ளீஸ் மாளவிகா...''

''நான் எதிர்பார்த்து ஏமாந்தவள் அர்ஜுன்... என் காதலில் தோற்றவள்... நினைத்தவனைக் கை நழுவ விட்டவள். என் இழப்பை என்னையறியாமல் வார்த்தைகளில் வெளிப்படுத்துகிறேன். நீ தவறாய் நினைக்காதே... இப்போது நாம் எங்கே போகிறோம்?''

''என் வீட்டிற்கு...''

## 10

அர்ஜுனின் வீட்டிற்குள் அவன் மாளவிகாவுடன் நுழைந்ததும்...

''இதோ அர்ஜுனே வந்து விட்டான். டேய் அர்ஜுன் கிளம்புடா...'' என்றாள் தமிழ்செல்வி.

''எங்கேம்மா...?''

''என்னடா இப்படிக் கேட்கிறாய்? இன்றைக்கு தர்ஷிணியின் அப்பாவை டிஸ்சார்ஜ் செய்கிறாங்களே... நீ வர வேண்டாமா?''

''அம்மா... இவள் மாளவிகா... நினைவிருக்கிறதா?''

தமிழ்செல்வி புருவம் தூக்கி யோசித்தாள். பின் முகத்தில் வெளிச்சம் பரவ...

''உன் கூடப் படிச்சாளே... அந்தப் பெண்ணா இது... ஜீன்ஸும் டி-சர்ட்டுமா... ஆளே மாறி விட்டாளே...'' என்று கூறினாள்.

''அமெரிக்காவில இருந்தால் ஆள் மாற மாட்டாளா?''

''அப்படியா... நீ அமெரிக்காவில் வேலை பார்க்கிறாயாம்மா?''

''ஆமாம் ஆண்ட்டி...''

அப்போது வெளியேயிருந்து மீசையை முறுக்கிய வண்ணம் வேதாச்சலம் வீட்டிற்குள் வந்தார்.

''என்னடி... அர்ஜுன் வந்துட்டான்னு சொன்னே... அவன் கிளம்பாமல் நின்று கதை பேசிக்கிட்டு இருக்கிறான்.''

''நீங்க எங்கே அப்பா இருந்தீங்க...?''

''தோட்டத்திற்கு... தண்ணீர் விட்டுக் கொண்டிருந்தேன். ஆமாம்... இது யார் இந்தப் பெண்... பார்த்த முகமாய் இருக்கிறாளே...''

''மாளவிகாப்பா... காலேஜில் என்கூடப் படித்தவள்...''

''ஓ... அந்தப் பெண்ணா... உன் அப்பா கூட காலேஜ் புரொபசா ஆச்சே... இப்போ எப்படி இருக்கிறார்?''

''அப்பாவும்... அம்மாவும் டில்லியில் அண்ணன் ஃபேமிலியோடு செட்டிலாகி விட்டார்கள் அங்கிள்.''

''நீ என்னம்மா செய்கிறாய்?''

''அமெரிக்காவில வேலை செய்கிறேன்.''

''அப்படியா... வராத பெண் வந்திருக்கிறாய்... தமிழ்செல்வி... நீ இந்தப் பெண்ணுக்கும்... அர்ஜுனுக்கும்... காபி டிபனை எடுத்து வைத்து விட்டுக் கிளம்பு நாம் ஹாஸ்பிட்டல் போய் விட்டு வந்து விடலாம்.''

''அர்ஜுன...?''

''அவன் எதற்கு? எத்தனையோ நாள்களுக்குப் பின்னால் வெளிநாட்டிலிருந்து வந்திருக்கும் ஃபிரண்டைப் பார்த்திருக்கிறான். அவன் பேச நிறைய விஷயங்கள் இருக்கும். அவன் இங்கேயே இருக்கட்டும்.



நாம போனால் போதும். அம்மா மாளவிகா... நீ நாங்கள் வரும் வரை... அர்ஜுனிடம் பேசிக் கொண்டிரும்மா... நாங்கள் வந்ததும் நைட் டின்னர் உனக்கு இங்கேதான்.''

''தேங்க்யூ அங்கிள்...''

''தேங்க்ஸ் சொல்லி அந்நியப் படுத்தாதே... இது உன் வீடு போல... எப்போது நீ இந்தியா வந்தாலும் எங்கள் வீட்டிற்கு வந்து விட்டுத்தான் போக வேண்டும்.''

''ஓகே அங்கிள்...''

இதுதான் வேதாசலம்... இரவு நெருங்கும் நேரத்தில... மருமகள் வீட்டில இல்லாத சமயத்தில... வெளிநாட்டில் வசிக்கும் ஒரு நவநாகரீக யுவதியுடன் மகன் வீட்டிற்கு வருகிறான். துளிக்கூட அவர்களை சந்தேகிக்காமல்... அதை ஆட்சேபமும் பண்ணாமல் வரவேற்று உபசரிப்பது அவருக்கு சாத்தியமானது. இதுபோன்ற பல குணங்கள் கொண்டவராய் அவர் இருப்பதால் தான் அர்ஜுன் அவருடைய பேச்சுக்கு எப்போதும் கட்டுப்படுவான்.

தமிழ்செல்வி அவசரமாய் டிபனையும், காபியையும் டைனிங் டேபிளில் வைத்து விட்டு மகனிடமும் மாளவிகாவிடமும் தலையாட்டி விட்டுச் சென்று விட்டாள்.

அவர்கள் போனதும் மாளவிகாவைப் பார்த்துப் புன்முறுவல் செய்தான் அர்ஜுன்.

''உன் அப்பா வெரி கிரேட் மேன் அர்ஜுன்...''

''யெஸ்...''

''ரியலி... ஐ லைக் ஹிம்...''

''இதை அவரிடம் மறக்காமல் சொல்கிறேன்... நீ டிபன் சாப்பிட வா...''

அவர்கள் பேசிக் கொண்டே சாப்பிட ஆரம்பித்தார்கள்.

**வே**தாச்சலமும், தமிழ்செல்வியும் அந்த நேரத்தில மருத்துவமனையில் போய் காரை விட்டு இறங்கிக் கொண்டிருந்தார்கள்.

''என்னம்மா... எல்லாத்தையும் எடுத்து வைத்து விட்டாயா...?''

''வைத்து விட்டேன் மாமா... அவர் எங்கே...?''

தர்ஷிணியின் விழிகள் அவர்களுக்குப் பின்னால் அர்ஜுன் வருகிறானா என்று தேடின.

''அர்ஜுன் வரவில்லையம்மா...''

''வரவில்லையா...? ஏன் மாமா... ஆபிஸில் அதிகம் வேலையா...?''

''இல்லையம்மா... அவன் ஆபிஸிலிருந்து அப்போதே வீட்டிற்கு வந்து விட்டான். ஆனால் கூட அமெரிக்காவில் வேலை பார்க்கும் அவன் ஃபிரண்டைக் கூப்பிட்டுக் கொண்டு வந்து விட்டான். எப்போதோ ஒருமுறை இந்தியாவிற்கு வரும் ஃபிரண்ட்... பேசிக் கொண்டிருக்கட்டுமென்று வீட்டில் அவங்களை இருக்கச் சொல்லி விட்டு நாங்கள் மட்டும் வந்தோம்... நான் பில் செட்டில் பண்ணி விட்டு வந்து விடுகிறேன்.''

''அண்ணா... என்னிடம் பணம் இருக்கிறது...''

''இருந்தால் வைத்துக் கொள்... தர்ஷிணியின் அப்பாவிற்கு செய்ய வேண்டியது எங்கள் கடமைம்மா...''

வேதாசலம் பணத்தைக் கட்டப் போய்விட, சரோஜா நெகிழ்ச்சியுடன் மகளைப் பார்த்தாள்.

''பார்த்தாயா தர்ஷிணி... இந்தக் கல்யாணத்திற்கு மறுத்தாயே... வேறு ஒருவராக இருந்தால் பெண் எடுத்த வீட்டிற்கு உதவ நினைப்பார்களா... கடைசி சொட்டு வரை கறக்கத்தான் நினைப்பார்கள்.''

''நிஜம்தான் அம்மா...''

தர்ஷிணியின் மனம் அர்ஜுனிடமே இருந்தது. அன்று அவளை மருத்துவமனையில் விட்டுவிட்டுப் போனவன்தான். ஒருவாரம் ஆகிவிட்டது. இன்று வரை அவனைப் பார்க்கவே அவளால் முடியவில்லை.

தமிழ்செல்வியும்... வேதாச்சலமும்தான் தினமும் மருத்துவமனைக்கு வந்து போனார்கள்.

'என்னை வெறுத்து விட்டானா...' தர்ஷிணி மனச் சஞ்சலம் கொண்டாள்.

அர்ஜுனை எதிர்பார்த்து ஏமாந்து போனாள். அவனைத் தேடிப் போய் பார்க்கலாம். ஆனால்... அவன் வந்து அழைக்காமல் எப்படிப் போவது...?

நோயில் கிடக்கும் தகப்பனாரையும்... அவர்கூட இருக்கும் தாயையும்



அந்த நிலையில் விட்டுவிட்டு எப்படிப் போவது?

**''அம்மா... அவள் இங்கேயே இருக்கட்டும்...''**

'ஏன் அப்படிச் சொன்னான். 'அவளுடைய அப்பாவிற்கு உடம்பு சரியில்லை. இருக்கட்டும்' என்று சொல்லியிருக்கலாமே...'

அவன் அப்படிச் சொல்லவில்லையே... அவள் மனம் தவித்தது.

வீட்டில் போய் இறங்கியதும் கிருஷ்ணனை கைத்தாங்கலாக சரோஜா அழைத்துக் கொண்டு வீட்டிற்குள் போனாள். தருண் பைகளை எடுத்துக் கொண்டு சென்றான்.

கிருஷ்ணனின் அறையில் அவரைப் படுக்க வைத்ததும் அவசரமாய் எல்லோருக்கும் காபி போட்டுக் கொண்டு வந்தாள் சரோஜா.

காபி குடித்து முடித்ததும்... வேதாச்சலமும், தமிழ் செல்வியும் எழுந்து கொண்டார்கள்.

''அப்போ நாங்க கிளம்புகிறோம்மா... சம்பந்தியை பத்திரமாய் பார்த்துக் கொள்.''

''சரிங்க அண்ணா... நீங்க இரண்டு பேரும் இருந்து சாப்பிட்டு விட்டுப் போகலாமே...''

''இல்லை அண்ணி... அங்கே அர்ஜுனும்... மாளவிகாவும் சாப்பிடாமல் இருப்பார்கள். நான் போய்த்தான் சமைத்துக் கொடுக்கணும்.''

''மாளவிகாவா... யார் அது...?''

''அவள்தான் அர்ஜுனுடைய அமெரிக்கா ஃபிரண்ட்... இரண்டு பேரும் காலேஜில் ஒன்றாகப் படித்தவங்க...''

''ஓ... அப்படியா...''

தர்ஷிணியின் மனதில் புயலடிக்க ஆரம்பித்ததை உணராமல் சரோஜா... இயல்பாகக் கூறினாள்.

''தர்ஷிணி... போய் விட்டு வருகிறோம்மா...''

என்னது... அவளை விட்டு விட்டு அவர்கள் மட்டும் போகிறார்களா? அவள் அவர்களுடன் போகப் போவதில்லையா...? தர்ஷிணி பதறினாள். அவளது பாவனையை உணராமல் வேதாச்சலமும், தமிழ்செல்வியும் அவசரமாய் காரில் ஏறிப் போய் விட்டார்கள்.

'என்னை ஏன் விட்டுவிட்டுப் போனார்கள்...?' தர்ஷிணி மனதிற்குள்

கேட்டுக் கொண்டாள்.

'என்... அவர்களுடன் நீயாய் கிளம்பிப் போயிருக்க வேண்டியதுதானே...' அவள் மனம் பதிலுக்குக் கேட்டது.

'எப்படிப் போவேன்.... 'அவள் இங்கேயே இருக்கட்டும்' என்று அவன் சொல்லி விட்ட பின்... நானாக எப்படிப் போவேன்...' அவள் சோபாவில் சுருண்டு படுத்துக் கொண்டாள்.

''தர்ஷினி... ஏதாவது சாப்பிட்டுவிட்டுப் படு...''

''பசிக்கலைம்மா...''

''அதற்காக வெறும் வயிறாய் படுப்பார்களா? எழுந்திரு. நாளைக்கு 'உனக்குத் துணையாக எங்க மருமகளை விட்டுவிட்டுப் போனோம். நீ அவளை இளைக்க வைத்து அனுப்பியிருக்கிறாயே?' என்று உன் மாமனாரும், மாமியாரும் என்னைப் பார்த்துக் கேட்க மாட்டார்களா...?''

'என் துணையே என்னை மறந்து விட்டதோ என்று நான் பயந்து கொண்டிருக்கிறேன். இதில் உனக்குத் துணையா...!'

தர்ஷினி தாயுடன் வாதாடாமல் எழுந்து அவள் கொடுத்த உணவை அவசரமாய் பிட்டு... வாய்க்குள் போட்டுக் கொண்டாள். சரோஜா வேலை முடிந்தவளாய் எழுந்து செல்ல... தர்ஷினி தன் அறைக்குள் புகுந்து... கட்டிலில் விழுந்தாள்.

## 11

'மாளவிகா... யார் அவள்...?'

தர்ஷினிக்கு தூக்கம் வரவில்லை... புரண்டு... புரண்டு படுத்தாள். 'அமெரிக்காக் காரியாமே... அவள் வந்ததால மாமனாரைப் பார்க்க ஹாஸ்பிட்டலுக்கு அர்ஜுன் வர மறுத்து விட்டானாமே... தர்ஷினியை விட மாளவிகா அர்ஜுனுக்கு உயர்வாகப் போய் விட்டாளா...?'

செல்போனை எடுத்தாள். மணி பார்த்தாள். பதினொன்றை தாண்டிக் கொண்டிருந்தது. பேசலாமா என்று நினைத்தாள். அவன் பேசினானா... என்று தோன்ற... அந்த நினைவை மாற்றிக் கொண்டாள்.

'யார் அந்த நிலவு...?
உனக்கும்... எனக்கும்... ஊடே வருவது...?



உறவைக் கூட மறக்க வைப்பது...?'

- என்று ..... செய்தியொன்றை அவனுக்கு அனுப்பி வைத்தாள். கண்மூடித் தூங்க முயன்றாள்.

அர்ஜுனின் போன், செய்தி வந்ததை அறிவிக்கும் போது... அவன் அப்போதுதான் மாளவிகாவை அவள் தங்கியிருந்த உறவினர் வீட்டில் இறக்கி விட்டுவிட்டு வீட்டுக்குத் திரும்பிக் கொண்டிருந்தான்.

காரை நிறுத்தி விட்டு இறங்கி... வீட்டுக்குள் வந்தவன்... தமிழ்செல்வி அழைப்பதைக் கேட்டுத் தயங்கி நின்றான்.

''என் அர்ஜுன்... தர்ஷினியின் அப்பாவைத்தான் டிஸ்ஜார்ஜ் பண்ணியாச்சே... இன்னும் ஏன் தர்ஷினி அங்கேயே இருக்க வேண்டும்? நம் வீட்டுக்கு அழைத்து வந்து விடு...''

''நீங்கள் கிளம்பி வரும் போது அவளும் உங்களுடன் புறப்படவில்லையா...?''

''இல்லையேப்பா... 'நானும் வருகிறேன்'னு அவள் சொல்வாள்னு தான் நானும் உன் அப்பாவும் எதிர்பார்த்தோம்... ஆனால் அவள் அப்படிச் சொல்லவுமில்லை... எங்களுடன் கிளம்பி வரவுமில்லை.''

''நீங்கள் கூப்பிடவில்லையா...?''

''எப்படிப்பா கூப்பிடுவது? அவளுடைய அம்மாவாவது... 'இனி நானாக பார்த்துக் கொள்வேன். தர்ஷினி கிளம்பட்டும்'ன்னு ஒருவார்த்தை சொல்லியிருக்கணும். அவங்களும் சொல்லவில்லை... அப்புறம் எப்படி... அவளைக் கூப்பிடுவது?''

''ம்... அவளாக வருகிறேன்னு சொல்லும் வரை அவள் அங்கேயே இருக்கட்டும்மா...''

''ஏன்டா...?''

''அவள் இங்கே வந்து அவளுடைய அப்பாவைப் பற்றி நினைத்துக் கவலைப்பட்டுக் கொண்டிருப்பாள்... அதற்கு அவள் அவருடைய உடம்பு முழுதாய் குணமாகும் வரை அங்கேயே இருப்பது பெட்டர் இல்லையா...?''

''என்னவோடா... எனக்கு இது கொஞ்சம் கூட பிடிக்கவில்லை. கல்யாணம் பண்ணி வந்த பின்னால்... புருஷன் வீடுதான் தன் வீடுன்னு

ஒரு பொண்ணு நினைக்கணும். இவளானா... அப்பாவுக்கு உடம்பு சரியாகாமல் வரமாட்டேன்னு பிடிவாதம் பண்ணிகிட்டு இருக்காளே...''

தமிழ்செல்வி புலம்பியபடி போய்விட... அர்ஜுன், மனதில் இருந்த உணர்வை வெளிக்காட்டிக் கொள்ளாமல் இறுகிப் போன முகத்துடன் படியேறினான்.

'அப்பாம்மாவுடன் கிளம்பி வரவில்லையா...?'

அறைக்கதவை திறந்து மூடினான். உடைமாற்றி விட்டு படுக்கையில் விழுந்தான். செல்போனை எடுத்து தலைமாட்டில் வைக்கப் போன போது... செய்தி பற்றிய அறிவிப்பு தெரிய... படித்துப் பார்த்தான்.

'நீ யார் அதைக் கேட்க...' என்று பதில் செய்தி அனுப்பலாமா என்று யோசித்தவன்... அந்த நினைவைக் கைவிட்டான்.

இதையெல்லாம் கண்டு கொள்ளாமல் விட்டுவிட வேண்டும் என்று நினைத்தவாறு கண்மூடிக் கொண்டான். விழிகளுள் அந்தக் காட்சி வந்தது.

அவன் கைபிடித்து இழுக்க... அவள் அவன் மேல் விழுகிறாள். அவன் இறுக்கி அணைத்து அவள் இதழ் நோக்கிக் குனியும் போது...

'சீ...' என்ற வார்த்தையுடன் அவனை உதறிவிட்டு எழுந்து கொள்கிறாள்.

அர்ஜுன் தூங்க அன்று வெகுநேரமானது.

**த**ர்ஷிணி பொறுமை இழந்து கொண்டிருந்தாள். அவள் அனுப்பும் செய்திகளுக்குப் பதில் இல்லை... அவனோடு பேச அவளுக்கு மனம் இல்லை.

இரண்டு நாள்களுக்கு ஒருமுறை வந்து விட்டுப் போகும் தமிழ்செல்வியின் முகத்தில் மாற்றம் தெரிந்தது.

''அவர் எப்படியிருக்கிறார் அத்தை...?'' என்று தர்ஷிணியாக விசாரித்த போது...

''அதுகூட உனக்கு நினைப்பிருக்கா...?'' என்று கேட்டுவிட்டுப் போய் விட்டாள்.

மறுமுறை மாமியார் வந்தபோது தர்ஷிணி... தனிமையாய் அவள் பக்கத்தில் அமர்ந்து பேச்சுக் கொடுத்தாள்.

''என்னைப் பற்றி அவர் கேட்டாரா அத்தை...?''



''ம்ம்... கேட்டான்...''

தர்ஷிணியின் மனம் பரபரப்பானது... அவசரமாக ''என்னைப் பற்றி என்ன சொன்னார் அத்தை...?'' என்று ஆவலுடன் கேட்டாள்.

''என்னத்தைச் சொல்லுவான். அவளாக இங்கே வருகிறேன்னு சொல்கிற வரைக்கும் அங்கேயே இருக்கட்டும்னு சொன்னான். வேறு என்ன சொல்வான்...?''

'அவ்வளவுதானா... வேறு ஒன்றும் இல்லையா...' நெஞ்சம் கசந்தாள் தர்ஷிணி.

அவளாக போக விரும்பினால்தான் அங்கே போக வேண்டுமா...?

அது அவள் வீடில்லையா...? அவன் அவளுடைய கணவன் இல்லையா...?

மனம் முரண்டியது...

தமிழ்செல்வி விடைபெற்றுக் கிளம்பும் போது 'நானும் வருகிறேன்' என்று சொல்ல அவளது நாவு துடித்தது. இயல்பான ரோசம் அதைத் தடுக்க - அவள் வாய் மூடிக் கொண்டாள்.

**'நான் வர நினைத்தால்தான்**
**வர வேண்டுமா...?**
**ஒருவேளை... நான் வர நினைக்காவிட்டால்...?'**

- என்று குறுஞ்செய்தி அனுப்பினாள். இத்தனை நாள் பதில் செய்தி அனுப்பாமல் இருந்தவன்... இதற்கு மட்டும் உடனே பதில் செய்தி அனுப்பினான்.

**'நினைத்தது போல நீயிருக்கலாம் - என்**
**நிழல்கூட அதைத் தடுக்காது...'**

- அவள் விக்கித்துப் போய் விட்டாள். இதை அனுப்பியது அர்ஜுனதானா...? அந்த அளவுக்கு அவளை அவன் வெறுத்து விட்டானா...?

முதல் முறையாக தமிழ்செல்விக்கு அவளாக போன் பண்ணிப் பேசினாள்.

''அவர் சாப்பிட்டு விட்டாரா அத்தை...?''

''எங்கேம்மா நேரா நேரத்திற்கு ஒழுங்காக சாப்பிடுகிறான். அவனுடைய

"பிரண்ட மாளவிகா வந்தாலும் வந்தாள் - இவனுக்கு அவளோடு ஊர் சுற்றவே நேரம் சரியாய் இருக்கு." போனை வைத்து விட்டாள்.

தார்ஷிணியின் கால்களின் அடியில் பூமி நழுவியது. பெண் மனம் விழித்துக் கொண்டது. இனியும் பொறுமை காக்கக் கூடாது. அதே சமயம்... அவன் அழைக்காமல் அவன் வீட்டிற்கு செல்லவும் கூடாது.

'என்ன செய்யலாம்...?'

யோசித்தாள்.

புத்திசாலி தார்ஷிணிக்கு யோசனை உடனே உதயமானது... தமிழ்செல்விக்கு உடனே போன் போட்டாள்.

"அத்தை..."

"என்னம்மா..."

"சுமங்கலி விரதம் இருக்கிறேன் அத்தை..."

"நல்ல காரியம் பண்ணுகிறாய்..."

"அது முடிந்து விட்டது..."

"அப்படியா...?"

"அதற்காக... அவரும்... நானும் சேர்ந்து இன்றைக்கு அம்மன் கோவிலுக்குப் போய் அர்ச்சனை பண்ண வேண்டும்..."

"அவனிடம் சொன்னாயா...?"

"போன் பண்ணினேன் அத்தை... ரிங் போய்க் கொண்டே இருக்கிறது. அவர் எடுக்கவில்லை."

"அவன் வீட்டிற்கு வந்ததும் அனுப்பி வைக்கிறேன். நீ கவலையே படாதே..."

"அப்புறம்... இன்னொரு விஷயம் அத்தை..."

"சொல்லும்மா..."

"கோவிலில் சாமி கும்பிட்டு விட்டு நேரே நம் வீட்டிற்குத்தான் நாங்கள் வரவேண்டும். ஆயிரம்தான் இருந்தாலும் இது என் அம்மா வீடு..."

தமிழ்செல்வியின் காதுகளில் தேனாறு பாய்ந்தது.

"என் தங்கமே..." என்று அவள் மகிழ்ந்து போய் விட்டாள்.



"நீ அவனுடன் கிளம்பி நம் வீட்டிற்கு வந்து விடும்மா... அங்கே உன் அப்பா குணமாகி விட்டார்தானே..."

"குணமாகாவிட்டாலும்... அவரைப் பார்த்துக் கொள்ள அம்மா இருக்கிறாங்க... நான் என் புருஷனைப் பார்த்துக் கொள்ள வேண்டாமா..."

'இல்லாவிட்டால் அந்த மாளவிகா என் புருஷனைத் தூக்கிக் கொண்டு போய் விடுவாளே...' என்று மனதிற்குள் தார்ஷிணி சொல்லிக் கொண்டதை அறியாதவளாக தமிழ்செல்வி புல்லரித்துப் போனாள்.

"இந்த வார்த்தைகளை உனக்கு எப்படிச் சொல்றதுன்னு நான் தவிச்சுகிட்டு இருந்தேன். நீயே சொல்லிக் கேட்கும் போது... என் மனசு குளிர்ந்து போகுது மருமகளே..."

"ஆனால்... அத்தை... நானாகக் கிளம்புவது போல இருந்தால், அம்மா... என்னை சுயநலம் பிடித்தவள்னு நினைத்துவிட மாட்டாங்களா..."

"அவனை உன் அம்மாவிடம் சொல்லச் சொல்கிறேன்... நீ கவலைப்படாமல் ரெடியாய் இரு..."

போனை வைத்துவிட்டு... தார்ஷிணி... தயாராகப் போனாள். மாலை நேரத்தில் அழகாக அலங்கரித்து அவன் வரவிற்காகக் காத்திருந்தாள். அவனும் வந்தான். அவளை எவளோ ஒருத்தியைப் பார்ப்பது போல பார்த்துக் கொண்டு முன்னறையில் அமர்ந்தான்.

## 12

அர்ஜுன் அன்று மாலை அலுவலகத்திலிருந்து வீடு திரும்பும் போது... வீட்டில் தமிழ்செல்வி இப்படியொரு கட்டளையுடன் காத்திருப்பாள் என்று எதிர்பார்த்திருக்கவில்லை.

"அர்ஜுன்! இந்தா காபி... குடித்து விட்டு... சட்டுப்புட்டுன்னு கிளம்பு..."

"எங்கேம்மா..."

"தர்ஷிணியின் வீட்டிற்கு..."

"எதற்கு...?"

தமிழ்செல்வி விவரம் சொன்னாள். அர்ஜுனுக்கு உடனே தர்ஷிணியின்

நோக்கம் புரிந்து விட்டது.

'நான் வர நினைத்தால்தான் வரவேண்டுமா...?'

எல்.கே.ஜி.யிலிருந்து அவளுடன் போராடியவன் ஆயிற்றே... அவளுடைய குணம் அவனுக்குத் தெரியாதா...?

'கைகாரி... என் வாயாலேயே அவளை வாவென்று அழைக்க வைக்க நினைக்கிறாள். ஏன்... அவளாக வரமாட்டாளாமா...'

''அம்மா... எனக்கு வேலையிருக்கிறது...''

''என்ன வேலைடா...? உன் பிரண்ட் மாளவிகாவுடன் ஊர் சுற்றும் வேலையா...?''

''அம்மா...''

''இங்கே பார் அர்ஜுன்... நான் உன்னையும் அந்தப் பெண் மாளவிகாவையும் தப்பாக நினைக்கவில்லை. ஆனால் நட்பைப் போல... உன் பெண்டாட்டியும் உனக்கு முக்கியமில்லையா...?''

''எம்மா... அவளாகத்தானே அவளுடைய அப்பா வீட்டில் போய் உட்கார்ந்தாள்...? நானா அனுப்பினேன்?''

''இதையே ஒரு சாக்காய் வைத்துக் கொண்டு அவளை அங்கேயே விட்டு வைக்கலாம்னு நீ பார்க்கிறாயா?''

''எம்மா... நீங்களும் அவள் பக்கமே பேசிக்கிட்டு இருக்கீங்க? கொஞ்சம் என் பக்கம் இருக்கிற நியாயத்தையும் பார்க்கக் கூடாதா...?''

''எல்லாத்தையும் நான் பார்த்துக்கிட்டுத்தான் இருக்கேன்டா... உனக்கு தர்ஷிணியை பிடிக்காது. அப்பா சொன்னதற்காக தாலியைக் கட்டியவன்தானே நீ... இப்போது மாளவிகாவைப் பார்த்ததும் உன் மனக்குரங்கு ஆடுதா...?''

''அம்மா... மாளவிகா என் ஃபிரண்ட்...''

''நம்புகிறேன்... எப்போது தெரியுமா? நீ தர்ஷிணியை கூப்பிட்டுக் கொண்டு வந்து அவளுடன் ஒழுங்காக குடித்தனம் பண்ண ஆரம்பிக்கும் போது... நான், நீ சொன்னதை நம்புகிறேன்.''

வேறு வழியில்லாமல் அவளை அழைத்துக் கொண்டு போக வந்திருந்தான் அவன்.



தர்ஷிணியின் முகத்தில் மலர்ச்சியைக் கண்டதும் இவன் பல்லைக் கடித்துக் கொண்டான்.

'ஜெயித்து விட்ட ஆணவமாடி... வா... வந்து பார் என்னோடு... உனக்கு கச்சேரி காத்திருக்குடி...'

''அம்மா... நான் கிளம்புகிறேன்.''

''எங்கேம்மா...?''

''என் வீட்டிற்கு...''

அவள் அர்ஜுனைப் பார்த்துக் கொண்டே சொன்னாள். அவன் எப்படியும் சரோஜாவிடம் வாய் திறந்து தன்னை அனுப்பச் சொல்லிக் கேட்க மாட்டான் என்பது தர்ஷிணிக்கு நன்றாகத் தெரியும். எனவே அவளே முந்திக் கொண்டாள்.

''அவர் என்னைக் கிளம்பச் சொல்கிறாரம்மா... என்னைக் கூப்பிட்டுக் கொண்டு போகத்தான் வந்திருக்கிறார்.''

''அப்படியா மாப்பிள்ளை...?''

அர்ஜுன், தர்ஷிணியை முறைத்தபடி... அதை மறுத்தான்.

''அப்படியெல்லாம் இல்லை அத்தை... தர்ஷிணி எவ்வளவு நாள் வேண்டுமானாலும் உங்கள் கூடவே இருக்கட்டும். எனக்கொன்றும் அதில் ஆட்சேபணை இல்லை.''

சரோஜா மகளைப் பார்க்க... அவள் தாயின் காதுக்கு மட்டும் கேட்கும்படி முணுமுணுத்தாள்.

''அவர் கோபமாக சொல்கிறாரம்மா...நீ சரின்னு என்னை நிறுத்தி வைத்தேன்னு வை... இங்கேயே நான் இருக்கட்டும்ன்னு விட்டுவிட்டுப் போய் விடுவார். அவர் பேசிய விதத்தைக் கவனித்தாயில்லை...?''

''ஐயையோ...''

சரோஜா அவசரமாய் மகளுக்கு பூஜையறையிலிருந்த குங்குமத்தை எடுத்து வைத்து விட்டாள்.

''போய் விட்டு வாம்மா... மாப்பிள்ளை... தர்ஷிணியை அழைத்துக் கொண்டு போங்க...''

''அவள் இங்கே இருக்க விரும்பினாளே...''

''அப்படி அவள் சொல்லவேயில்லை மாப்பிள்ளை. உங்களை விட்டுவிட்டு... அவள் எப்படி இங்கு இருப்பாள்...?''

தர்ஷிணி வெற்றிப் பார்வையோடு... டைனயத் தூக்கிக் கொண்டு நிற்க... அர்ஜுன் வேறு வழியில்லாமல் அவளுக்காக கார் கதவைத் திறந்து விட்டான். அவள் சட்டமாக ஏறி அவன் பக்கத்தில் அமர்ந்து கொண்டாள்.

''கோவிலுக்குப் போகணும்...!''

''எதுக்கு...?''

''அத்தை சொல்லியிருப்பாங்களே...''

''அது நீ போட்ட டிராமாதானே...''

''எதுவாக இருந்தாலும் எனக்குக் கோவிலுக்குப் போகணும்.''

''நான் முடியாது என்றால்...?''

''அத்தையிடம் சொல்வேன்.''

'எப்படி மிரட்டுகிறாள் பார்...' அர்ஜுன் பல்லைக் கடித்தபடி... கோவிலை நோக்கி காரைச் செலுத்தினான்.

அம்மனை வணங்கி விட்டு... இருவரும் காரில் திரும்பினார்கள். வீட்டிற்குள் நுழைந்ததும் தர்ஷிணிக்கு நிம்மதியாக இருந்தது.

'யப்பா... இந்த வீட்டிற்கு திரும்பிவர எத்தனை பாடு...'

மருமகளை வந்து அணைத்து மகிழ்ந்து போன தமிழ்செல்விக்கு தர்ஷிணியிடம் பேச ஆயிரம் கதைகள் இருந்தன. மாமியார் சொல்வதற்கு 'ஊம்...' கொட்டியபடி இரவு சமையலை முடித்து விட்டாள் தர்ஷிணி.

''என்னம்மா... சமையலை முடித்து விட்டாயா...?'' தமிழ்செல்வி ஆச்சரியப்பட்டுப் போனாள்.

''ஆமாம்... மாமாவையும் அவரையும் டைனிங் ஹாலுக்கு வரச் சொல்லுங்க.''

செய்து வைத்திருந்த பதார்த்தங்களை... பாத்திரத்தில் எடுத்துச் சென்று... சாப்பாட்டு மேஜையில் அவற்றை பரத்தி வைத்தாள் தர்ஷிணி.

அவளது கைச் சமையலை ரசித்துச் சாப்பிட்டார் வேதாச்சலம்.

''ஆஹா... ஓஹோ... பேஷ்... பேஷ்... ரொம்ப நல்லாயிருக்கு...''

'இவர் ஒருத்தர்... இவள் பாடினாலும் 'பேஷ்...' போடுகிறார். சமைத்தாலும் 'பேஷ்' போடுகிறார்.' அர்ஜுன் மனதிற்குள் எரிச்சல்பட்டான்.

''மருமகளே... உனக்கு பாட்டும்... வீணையும் தான் வரும்னு நினைத்தேன். சமையலும் பிரமாதமாய் வருகிறதே...''

''இன்னும் கொஞ்சம் போட்டுக்கங்க மாமா...''

''போடு... போடு... நல்ல சாப்பாடு சாப்பிட்டு நாளாச்சு. அப்படியே என் அம்மா கைப்பக்குவம் உனக்கும் வந்திருக்கு.''

'ஆஹா... சான்ஸ் கிடைத்து விட்டது. இந்த 'பிட்'டைப் போட்டு... மாமியாருக்கும்... மருமகளுக்கும் மூட்டி விட வேண்டும்' அர்ஜுன் உற்சாகமாய் நிமிர்ந்தான்.

''என்னம்மா... அப்பா... இப்படிச் சொல்கிறாரு...''

''அவர் நிஜத்தைத்தான் சொல்கிறார்டா... உன் பாட்டியின் கைமணம்... அப்படியே தர்ஷிணியிடம் இருக்கு...''

'ம்ஹூம்... இப்படி ஒரு மௌனி மாமியார் உலகத்தில் இருப்பாளா...'

ஏமாற்றத்துடன் கை கழுவ எழுந்து சென்ற அர்ஜுனைப் பார்க்கும் போது தர்ஷிணிக்கு சிரிப்பு வந்தது. தற்செயலாய் திரும்பி அதைப் பார்த்துவிட்ட அர்ஜுன் கடுத்தான்.

'சிரிக்கிறாயாடி... வா மேலே... உனக்கு இருக்கு...'

அவன் போய் விட்டான். சற்று நேரம் கழித்து... அவனுடைய அறைக்குள் நுழைந்த தர்ஷிணி படபடப்பாக உணர்ந்தாள்... கதவைத் தாழிட்டு வந்தவளை அதிசயம் போல் பார்த்தான் அர்ஜுன். அவள் புரியாமல் விழித்தாள்.

''என்ன...?''

''கதவைத் தாழ்போட மாட்டாயே... இப்போது மட்டும் என்ன?''

தர்ஷிணி முகம் சிவந்தாள். அதை அவனிடமிருந்து மறைக்க முயலாமல்... கட்டிலில் ஏறி... நன்றாக உள்ளே தள்ளிப் படுத்தாள்.

'மயக்கப் பார்க்கிறாள்...'

அர்ஜுன் ஒதுங்கிப் படுத்துக் கொண்டான். மெல்ல... தர்ஷிணி சன்னக் குரலில் பாட ஆரம்பித்தாள்.

''மன்னிக்க வேண்டுகிறேன் - உந்தன்
ஆசையைத் தூண்டுகிறேன் - கொஞ்சம்
சிந்திக்க வேண்டுகிறேன் - கண்கள்
சந்திக்க ஏங்குகிறேன்...''

- அர்ஜுன் அவள் புறம் திரும்பிப் படுத்தான். நெருக்கத்தில் தெரிந்த அவளுடைய முகம் அவனது காதலை யாசித்தது. அது கொஞ்சம்கூடப் பாதிக்காதவனாக அவன் கேட்டான்.

''என்னடி... பாட்டெல்லாம் தூள் பறக்குது...''

''ஏன்... நான் பாடுவதை இன்றைக்குத்தான் புதிதாய் கேட்கறீங்களா...''

கோவாவில் அவள் பாடியதை நினைவூட்டும் வகையில் அவள் கேட்டாள்.

அவள் பாடியதையும்... அதற்குப் பின் நடந்ததையும் நினைத்துக் கொண்டவனுக்கு நெஞ்சம் கடுத்தது.

## 13

''ஏய்... என்னை என்னவென்று நீ நினைத்துக் கொண்டாய்?''

''என் புருஷனென்றுதான்...''

''இந்த ஜால வார்த்தையெல்லாம் என்னிடம் வேண்டாம்...''

''அப்படிச் சொல்லி விட்டால் எப்படி...? நான் உங்களிடம் பேசாமல் வேறு யாரிடம் பேசுவது...?''

''நீ பேசுவதைக் கேட்க எனக்கு இஷ்டமில்லை...''

''வேறு யார் பேசுவதைக் கேட்க இஷ்டம்? அந்த மாளவிகா பேசுவதையா...?''

அர்ஜுன் அவளைப் பட்டென்று அடித்து விட்டான்.

''இங்கே பார்... அவள் என் ஃப்ரெண்ட்... தப்பாகப் பேசினால் உன் பல்லை உடைத்து விடுவேன்.''



விடியும் வரை... தர்ஷிணி விசும்பிக் கொண்டே இருந்தாள். அர்ஜுனின் மனம் சங்கடப்பட்டது. ஆனாலும் அவன் அவளைச் சமாதானப்படுத்த முனையவில்லை.

விடிந்த போது... அவள் அவனைத் தொட்டு எழுப்பினாள். விழித்துக் கொண்டவன் அவள் கையைத் தட்டிவிட்டு எழுந்து அமர்ந்தான்.

''காபி... பேப்பர்...''

அவன் குளித்து முடித்து வரும் போது... அவனுடைய துணிகள் தயாராக இருந்தன.

'இவளை யார் இதை எடுத்து வைக்கச் சொன்னது...' நினைத்துக் கொண்டாலும் அவள் பொருத்தமாக எடுத்து வைத்திருப்பதை மனதிற்குள் பாராட்டிக் கொண்டே போட்டுக் கொண்டான்.

''இன்னும் கொஞ்சம் சட்னி போடவா...?''

பார்த்துப் பார்த்து பரிமாறினாள்... எந்தவித பாராட்டும் சொல்லாமல் சாப்பிட்டு முடித்தான் அர்ஜுன்.

''மதியம் லன்ச் பாக்ஸ்...''

அவனுடைய கேரியர் அடங்கிய சிறு பேகை அவனது காரில் வைத்து விட்டாள். அவன் பதிலுக்கு கையாட்டுகிறானா என்ற கவலையின்றி டாட்டா காண்பித்து அனுப்பி வைத்தாள்.

மாலையில் அவன் வரும் போது வாசலில் காத்திருந்தாள். அவன் வந்ததும் ஓடிஓடிக் கவனித்தாள்... இரவில் இயல்பாக அவனை நெருங்கிப் படுத்துத் தூங்கினாள்.

தினப்படி இந்த வழக்கங்கள் தொடர... மெல்ல அர்ஜுன் அவற்றுக்கு பழகிவிட்டான். மாலை வீடு திரும்பும் போது 'பளிச்'சென்ற முகத்துடன்... மல்லிகை மலர்சூடி... வாசலில் வந்து அவள் வரவேற்பதை விரும்ப ஆரம்பித்தான்.

இரவினில் அவன் நாசியை வருடும் மல்லிகை வாசத்தை நுகர்ந்தபடி தூங்க ஆரம்பிப்பது அவனுக்கு பிடித்தமான ஒன்றாக ஆகிப் போனது.

மிக அருகில் படுத்து உறங்கும் தர்ஷிணியிடமிருந்து வரும் பிரத்யேக நறுமணத்தை அவன் ரசித்தான். ஒதுங்கிப் போகாமல்... ஒட்டிப் படுக்கும் அவளது இயல்பை ஏற்றுக் கொண்டான்.

ஆனால்... மறந்தும் அவன் விரல் தொடக்கூட முனையவில்லை.

தர்ஷிணியும்... எத்தனையோ வகைகளில் முயன்று பார்த்தாள். அவன் அமர்ந்திருக்கும் போது... அவன் முகத்தின் மீது முந்தானை சேலை படிய கடந்து போனாள்.

சேலையின் வாசத்தை ரசித்து முகர்ந்தவன்... அந்த சேலையைப் பற்றி இழுத்து... அவளை நிறுத்த முயலவில்லை.

அவன் படுத்திருக்கும் போது... அவன் மேல் படர்ந்து... கட்டிலின் மறுபக்கம் கிடந்த விரிப்பை எடுத்தாள். தன் மேல் படியும் அவளது உடலின் மென்மையில் கிளர்ந்தானே தவிர... அவளை... அவன் கரம் சுற்றி வளைக்கவில்லை.

தர்ஷிணிக்கு அழுத்து விட்டது. ஆணைப்பட்ட விசுவாமித்திரனையே அந்த மேனகை வளைத்து விட முடிந்தது. ஆனால் இவனை வளைக்க அவளால் முடியவில்லையே.

"அப்படி... என்னதான் நான் செய்து விட்டேன்...?" நொடியாய் அவனிடம் ஒருநாள் அவள் கேட்டே விட்டாள்...

அது இரவு நேரம். அறையின் தனிமையில்... ஒரு புத்தகத்தைப் பிரித்து அதில் தலையைக் கொடுத்திருந்தவன்... அவளை நிமிர்ந்து ஒரு கணம் பார்த்தான். பின் மீண்டும் கண காரியமாய் புத்தகத்தை படிக்க ஆரம்பித்து விட்டான்.

"நான் கேட்கிறது காதில விழுகிறதா... இல்லையா...?"

"ம்ம்... விழுகிறது... விழுகிறது..."

"அப்படியானால் எனக்குப் பதில் சொல்லுங்கள்..."

"அவசியம் பதில் சொல்லணுமா... என்ன..."

அவன் அலட்சியமாய் மீண்டும் புத்தகத்தை புரட்ட... தர்ஷிணி கோபமானாள். எக்கி அவன் கையில் இருந்த புத்தகத்தைப் பிடுங்கினாள்.

"தர்ஷிணி... புத்தகத்தைக் கொடு..."

"கொடுக்க மாட்டேன்..."

"விளையாடாதே... கொடு..."

"கொடுக்க முடியாது..."



"கொடுடின்னா..."

அர்ஜுன் மூன்றாவது முறையாக அவளது கன்னத்தில் அடித்து விட்டான். தர்ஷிணியின் கண்களில் கண்ணீர் பொங்கி வழிந்தது. அர்ஜுனின் கோபமும், பிடிவாதமும் அதனுடன் சேர்ந்து வடிந்தது.

"ஏய்... ஏண்டி என்னைக் கொடுமைக்காரனாக ஆக்குற...?"

"அடிப்பதுதான் கொடுமையா...? என்னைப் புறக்கணிப்பதும் கொடுமைதானே..."

"உன் மனச்சாட்சியைத் தொட்டுச் சொல... நான் உன்னைப் புறக்கணித்தேனா...?"

"அர்ஜுன்... அன்னைக்கு என்ன நடந்ததுன்னு ஒரு நிமிடம் நினைத்துப் பாருங்க..."

"என்ன நடந்திருந்தாலும்... என்னிடம் நீ சொல்லியிருக்கணுமா... இல்லையா...? நீ அதை சொன்னபின்... நான் உன்னிடம் ஆசையாக நெருங்கியிருந்தால்... நீ அப்படி ஒரு வார்த்தையை சொல்லியிருக்கலாம். ஆனால் நீ அதைச் சொல்லலே இல்லையே..."

"அன்னைக்கு எனக்கு இருந்த பதட்டத்தில் அப்படிப் பேசி விட்டேன்."

"தர்ஷிணி... உன்னிடம் நான் சொல்வது இதைத்தான்... பேசிய வார்த்தையை உன்னால் திரும்பப் பெற முடியாது. நான் கேட்ட வார்த்தையை என்னாலும் மறக்க முடியாது."

"அர்ஜுன்... நான் உங்கள் மனைவி..."

"இது விதி தர்ஷிணி... வேறென்ன நான் சொல்ல...? உன்னைக் கல்யாணம் பண்ணிக் கொள்ள எனக்கு கொஞ்சம் கூட இஷ்டமில்லை. என் அப்பாவின் கத்தலுக்காக பயந்து உன் கழுத்தில் தாலியைக் கட்டினேன். இப்போது அனுபவிக்கிறேன்."

"எனக்கும் இதேபோல பேசத் தெரியும் அர்ஜுன்."

"பேசு... நான் கேட்டுக் கொள்கிறேன். ஆனால் மனம் இசைந்து உன்னோடு வாழ மட்டும் என்னால் முடியாது."

"இதுதான் உங்கள் முடிவா...?"

"ஆமாம்..."

தர்ஷிணி பேசாமல் படுத்து விட்டாள்.

## 14

மறுநாள் காலையில் அறைக்கதவு பலமாய் தட்டப்படும் சப்தம் கேட்டு அர்ஜுன் விழித்துக் கொண்டான். அருகே தார்ஷிணி படுத்திருந்தாள். எழுந்து சென்று கதவைத் திறந்தான். தமிழ்செல்வி காபியோடு நின்றிருந்தாள்.

''என்னம்மா... நீங்க காபி கொண்டு வரீங்க...''

''தார்ஷிணி எங்கேடா...?''

''படுத்திருக்கிறாள்...''

''இன்னுமா எழுந்திருக்கவில்லை. அவள் இப்படிப் படுத்துத் தூங்கும் ஆள் இல்லையேடா...''

தமிழ்செல்வி உள்ளே வந்து தார்ஷிணியை தொட்டு எழுப்ப முயன்றாள். அவளது கைபட்ட தார்ஷிணியின் மேனி அனலாய்க் கொதித்தது.

''என்னடா... இப்படிக் காய்ச்சல் அடிக்குது. நீ இதைக் கவனிக்காமல் என்ன செய்கிற...''

அர்ஜுன் அவசரமாய் அவளின் நெற்றியில் கை வைத்துப் பார்த்தான். கொதித்தது.

''தார்ஷிணி... தார்ஷிணி...''

அவள் மெதுவாகக் கண் விழித்தாள். எழுந்து கொள்ள முயன்றாள். அவளால் முடியவில்லை.

அர்ஜுன் அவசரமாய் சட்டையை போட்டுக் கொண்டு அவளின் இடுப்பில் கை கொடுத்துத் தூக்கிக் கொண்டு படி இறங்கினான்.

வாழைத்தண்டு போல அவனது கைகளில் சோர்ந்து கிடந்தவளைப் பார்க்கும் போது அவன் மனம் வலித்தது.

'ராத்திரி நன்றாகத்தானே இருந்தாள்...'

அதன்பின் ஏன்... நன்றாக இல்லாமல் போனாள் என்பது அவனுக்குப் புரிந்தது. அவன் மனம் கனத்தது. 'பாவி... ஏண்டி என்னைப் பார்த்து அப்படி வாய்விட்டுத் தொலைத்தாய்...'



தார்ஷிணி தேறி எழுந்திருக்க ஒரு வாரத்திற்கு மேல் ஆகி விட்டது. உடல் நிலை சரியான பின் வழக்கமான வேலைகளை அவள் செய்ய ஆரம்பித்தாள்.

'இதையெல்லாம் நான் செய்யக்கூட மாட்டேனா? என் டிரஸ்ஸை செலக்ட் பண்ணிக் கொள்ளக்கூட முடியாத குழந்தையா நான்...? ஏன் உன் உடம்பை அலட்டிக் கொள்கிறாய்?''

அவன் என்னவோ கரிசனமாகத்தான் கேட்டான். அவள் வெறுமையாய் பதில் சொன்னாள்.

''இதை மட்டும்தானே என்னால் செய்ய முடியும்? இந்த உரிமையைக் கூட எனக்குத் தர மறுக்கிறீங்களா?''

அவனுக்கு அவளைப் பார்க்கவே சங்கடமாக இருந்தது. அவளிடம் சிரித்துப் பேச முயன்றான். அவள் ஓரிரு வார்த்தைகளில் பேச்சை நிறுத்திக் கொண்டாள். பாட்டுப் பாடுவது அவளுக்குப் பிடிக்கும் என்பதால் பாட வைக்க முயன்றான்.

''தார்ஷிணி ஒரு பாட்டுப் பாடேன்...''

**''காலமகள் வழியினிலே ஓடும் நதி...**<br>
**கன்னிமகள் விழியினிலே ஆடும் விதி...**<br>
**நதியோடு செல்லும் வெள்ளம் ஊருக்காக...**<br>
**விதியோடு செல்லும் உள்ளம் யாருக்காக...''**

– அவ்வளவுதான்... அர்ஜுன் அரண்டு போய் விட்டான்.

''தார்ஷிணி... உனக்கு ஒரு கும்பிடு... உன் பாட்டுக்கும் ஒரு கும்பிடு. தயவு செய்து உன் அழுவாச்சி பாட்டை நிறுத்திக் கொள் தாயே...''

அவள் அதற்கும் பதில் பேசாமல் பாட்டை நிறுத்திக் கொண்டாள்.

'இவளை எப்படி மாற்றுவது...'

அவள் விரும்பியபடி அவனுடன் இசைந்து வாழ்ந்து விட்டால்... அவள் இயல்பாகி விடுவாள். ஆனால்... அர்ஜுனின் மனம்... அவள் சொன்ன சிறுசொல்லில் சிக்கித் தவிக்கிறதே...

அவன் அதே சிந்தனையோடு இருக்கும் போது... மாளவிகாவிடமிருந்து அவனுக்குப் போன் வந்தது.

''சொல் மாளவிகா...'' என்று அவளிடம் சற்று நேரம் பேசிக் கொண்டிருந்து விட்டுக் குளிக்கப் போனான் அவன்.

அவன் குளித்து விட்டு வருமுன்னர்... தர்ஷிணி அவன் போனை எடுத்து மாளவிகாவின் நம்பரை தன் செல்லில் பதிவு பண்ணிக் கொண்டதை அவன் அறியவில்லை.

அன்று மாலை அவன் அலுவலகத்தில் இருந்து கிளம்பும் போது மாளவிகாவிடமிருந்து அவனுக்கு போன் வந்தது.

''அர்ஜுன்... உன்னிடம் அவசரமாய் பேச வேண்டும்...''

''நீ ஊருக்குப் போக இன்னும் இரண்டு நாட்கள் இருக்கின்றதே மாளவிகா...''

''ஏன் இதைச் சொல்கிறாய்...?''

''இல்லை... நாம் நாளை பார்த்துக் கொள்ளலாமே...''

''இன்றைக்கு என்ன... நாள் நன்றாக இல்லையா...?''

''அதில்லை... மாளவிகா... தர்ஷிணி எனக்காகக் காத்திருப்பாள்.''

''அவளைப் பற்றிப் பேசத்தான் நான் உன்னைக் கூப்பிட்டேன்.''

''அவளைப் பற்றி நீ பேச என்ன இருக்கிறது?''

''நிறைய இருக்கிறது...''

''புரியவில்லை...''

''நேரில் வா புரியும்...''

''முதலில் நீ என்னவென்று சொல்லு.''

''தர்ஷிணி என்னைப் பார்க்க சற்றுமுன் வந்திருந்தாள்... இந்த விவரம் போதுமா? இல்லை... இன்னும் கொஞ்சம் வேண்டுமா...?''

''நான் நேரில் வருகிறேன்...''

மாளவிகா அவனுடைய உறவினர் வீட்டுக்கு அருகில் இருக்கும் பூங்காவில் அவனுக்காக காத்திருந்தாள்.



''என்ன அவசர மாளவிகா...?''

''தர்ஷிணி இன்று மதியம் எனக்குப் போன் பண்ணி என்னைச் சந்திக்கணும்னு சொன்னாள்.''

''அவளுக்கு உன் போன் நம்பர் எப்படித் தெரியும்?''

''உன் செல்போனிலிருந்து எடுத்திருக்கலாம்.''

''ஓ...''

''அது சரிதானே அர்ஜுன்...''

''அப்புறம்...?''

''நான் அவளை இதே பூங்காவிற்குத்தான் வரச் சொன்னேன். ஒரு ஆட்டோவில் வந்து இறங்கினாள்.''

''என்னிடம் சொல்லியிருந்தால் நானே காரில் கூப்பிட்டுக் கொண்டு வந்திருப்பேனே...?''

''உனக்குத் தெரியாமல் இருக்க வேண்டும்னுதானே அவள் உன்னிடம் சொல்லாமல் வந்திருக்கிறாள்?''

''எனக்குத் தெரியாமல் ஏன் அவள் உன்னைப் பார்க்க வேண்டும்?''

''அர்ஜுன்...''

''என்ன மாளவிகா...?''

''அவள் என்னிடம் என்ன கேட்டாள் தெரியுமா..?''

''என்ன கேட்டாள்...?''

''உன்னை இரண்டாம் தாரமாக நான் மேரேஜ் பண்ணிக்கணும்னு கேட்டாள் அர்ஜுன்...''

''என்ன சொல்கிறாய் மாளவிகா?''

அர்ஜுன் அதிர்ந்து போய் நின்று விட்டான். தர்ஷிணி இந்த அளவுக்குப் போகக் கூடும் என்று அவன் எதிர்பார்க்கவில்லை. அவளுக்கு விவாகரத்து கொடுக்கப்போகிறானா...? அவன் மாளவிகாவைக் கல்யாணம் பண்ணிக் கொண்டால்... அவள் என்ன செய்வதாக இருக்கிறாள்...? அவளும் வேறு ஒருவனைத் திருமணம் செய்து கொள்வாளா?

ஆனால் அது இல்லை என்றாள் மாளவிகா.

"அவள் தெளிவாய் பேசுகிறாள் அர்ஜுன். உன்னை நேசிக்கிறாளாம். நீ இல்லாத வாழ்க்கையை அவளால் நினைத்துக் கூடப் பார்க்க முடியாதாம். அதனால்..."

"அதனால...?"

"அவள் அந்த வீட்டின் ஏதாவது ஒரு மூலையில் வேலைக்காரி போல முடங்கிக் கொள்வாளாம். நான் அதற்கு மட்டும் அவளை அனுமதித்தால் போதுமாம். உன்னைக் கண்ணால் பார்த்துக் கொண்டிருந்தாலே அவளுக்குப் போதுமாம். உன் நிழலில் வாழும் சந்தோஷத்திலேயே மீதியிருக்கும் வாழ்நாளை அவள் கழித்து விடுவாளாம்."

கேட்கவே சகிக்கவில்லை அர்ஜுனுக்கு... அது எப்படி அவளால் இதைச் சொல்ல முடிகின்றது. இதை நினைத்துப் பார்க்கக் கூட அர்ஜுனால் முடியவில்லையே...

அவள் ஒரு மூலையில் முடங்கிக் கிடக்க... அவள் கண் எதிரில் இன்னொருத்தியுடன் அவன் குடும்பம் நடத்துவதா...? அவனால் அது முடியுமா?

தாலியும்... திருமணமும் வாழ்வில் ஒருமுறைதான் என்ற கொள்கையோடும் நம்பிக்கையோடும் வாழ்பவன் அவன்.

தர்ஷிணியைப் பிடிக்காத போதும்... அவளைத் தன் மனைவியாக்கிக் கொண்ட பின் முழுமனதாகக் காதலிக்க ஆரம்பித்தவன் அர்ஜுன்.

அப்படியிருக்க... அவளை விட்டு இன்னொருத்தியை அவன் தொடுவதா...?

"ஐ ஆம் ஸாரி மாளவிகா... அவள் மனதளவில் பாதிக்கப்பட்டிருக்கிறாள்." என்று சங்கடத்துடன் கூறினான் அர்ஜுன்.

"அதுதான் தெளிவாகத் தெரிகிறதே... என் கேள்வி என்னவென்றால் அவளுடைய மனதைப் பாதித்தது யார் என்பதுதான்."

"வேறு யார்... எல்லாம் நான்தான்..."

"நீயா... உன்னால் இப்படிச் செய்ய முடியாதே...?"

"நீ தோழி என்ற எல்லைக்குள் நிற்பவள். கணவன் - மனைவிக்குள் வரும் அந்தரங்க சண்டைகள் பற்றி உனக்குத் தெரியாது. அதை உன்னிடம்



சொல்லவும் என்னால் முடியாது."

"ஐ ஸீ... ஆனால் அர்ஜுன்... நீ அவளை மிகவும் ஆராதித்தவன்..."

"இப்போதும் ஆராதிக்கிறேன்."

"அதனால்தான் உனக்கு மறுமணம் செய்து விட்டு மூலையில் அவள் முடங்கி விடத் தயாரானாளா?"

"என்னைக் கொல்லாதே மாளவிகா..."

"என்ன நடந்தது என்று நீயும் என்னிடம் சொல்ல மாட்டாய்... இதற்குத் தீர்வு காணாமல் நானும் நிம்மதியாய் அமெரிக்காவிற்குப் போக முடியாது. என் நிலைமையும் நீ கொஞ்சம் யோசித்துப் பார் அர்ஜுன்..."

அர்ஜுன் சங்கடத்துடன்... மேம்போக்காக அவர்களின் பிரச்சனையைக் கூறினான்.

"ஸோ... அவள் உன் மனது புண்படும்படி ஒரு வார்த்தையைச் சொல்லி விட்டாள். அதை மறந்து அவளைத் தொட உன்னால் முடியவில்லை?"

"ம்ம்..."

"அர்ஜுன்... இப்படிச் செய்தால் என்ன...?"

"என்ன செய்யலாம் என்கிறாய்...?"

"பழிக்குப் பழி... ரத்தத்திற்கு ரத்தம்... இதையெல்லாம் நீ கேள்விப்பட்டிருக்கிறாயா...?"

"நீ சினிமா அதிகம் பார்ப்பாயா...?"

"பார்த்தால் தப்பில்லை..."

"இப்போது நீ என்ன சொல்ல வருகிறாய்...?"

"இதைப்போல மூன்றாவது ஒரு வாக்கியமும் இருக்கு..."

"என்ன அது..."

"வார்த்தைக்கு வார்த்தை..."

அர்ஜுனின் முகம் பிரகாசமானது. அவன் ஆனந்தத்துடன் மாளவிகாவைப் பார்த்தான்.

"அதை எப்படிச் செய்வது...?"

"ஸெம ஈஸி... அவள் பாணியிலேயே போய்... அவள் உன்னை என்ன

முறையில் டீஸ் பண்ணினாளோ... அதே முறையில் நீ பதிலுக்கு திட்டி... அவளை டீஸ் பண்ணிவிடு. உன் மனம் சமாதானம் ஆகி விடும். அதற்குப் பின்னால் அவளுடன் இசைந்து வாழப்பார்.''

''தேங்க்ஸ் மாளவிகா...''

''எதுக்கு தேங்க்ஸ் சொல்கிறாய்...?''

''புத்திசாலித்தனமாய் என் பிராப்ளத்தை சால்வ் பண்ணியதற்கு...''

''தேங்க்ஸிற்கு பதில் வேறு ஒன்று சொல்கிறாயா அர்ஜுன்...?''

''சொல் மாளவிகா... செய்கிறேன்...!''

''என்னை மேரேஜ் பண்ணிக் கொள்கிறாயா...? அதுதான் தர்ஷிணியே சம்மதித்து விட்டாளே...!''

அர்ஜுன் அவளை அதிர்ந்து நோக்க... அவளோ அவனைப் பார்த்து கண் சிமிட்டிச் சிரித்தாள்.

அர்ஜுன் வீட்டிற்குப் போகும் போது... மல்லிகைப்பூ வாங்கிக் கொண்டான். அதை மறைவாக வைத்துக் கொண்டு, விடு... விடென்று மாடிக்குப் போய் விட்டான்.

தர்ஷிணி கையில் காப்பியோடு அறைக்குள் வந்தாள்.

''என்னது இது...?''

''காப்பி...''

''விஷமில்லையே...?''

''அர்ஜுன்...''

''அலட்டிக்காதேடி... முதலில் கதவைச் சாத்து...''

அவள் புரியாமல் கதவைச் சாத்தி தாழிட்டாள். அர்ஜுன் காபியைப் பருகியபடி அவளிடம் மல்லிகைப்பூவை விட்டு எறிந்தான்.

அவள் முகத்தில் பட்டு அது கீழே விழுந்தது. அவள் குனிந்து எடுத்தாள்.

''என்ன அதுன்னு தெரியுதா?''

''பூ...''

''ஏன் உன்னிடம் கொடுக்கிறேன் தெரியுமா?''



''தெரியவில்லை...''

''நீ தலையில் வைத்துக் கொடுத்தால்தான்... மாளவிகா வைத்துக் கொள்வாளாம். இதைப்பற்றி ஏதோ ஒரு பாட்டு இருக்கிறதாமே...''

''ம்ம்... இருக்கிறது...''

''எங்கே பாடு...''

அவள் துயரத்துடன் அவனைப் பார்த்தாள். அவன் இளகியில்லாமல் உறுமினான்.

''ம்ம்... பாடு...''

அவள் கண் கலங்கப் பாடினாள்.

**''சூடிக் கொடுத்தவள் நான் தோழி...**

**சூடிக் கொண்டவளே நீ வாழி...''**

அவள் பொறுக்க முடியாமல் விம்மி அழ... அர்ஜுன் அவளுக்கு ஆறுதல் சொல்வது போல் அணைத்துக் கொண்டான்.

''வேண்டாம்டி... அழாதே...''

அவள் நம்ப முடியாதவளாக அவன் மார்பினில் ஒன்றிக் கொண்டாள். அர்ஜுன், அவளைக் கட்டியணைத்து உச்சி முகர்ந்து... அவள் நெற்றியில் முத்தமிட்டு... இதழ் தேடிக் குனிந்தான். அவள் மனம் படபடத்தது. கடைசி வினாடியில் அவளை உதறித் தள்ளி விட்டான். அவள் கட்டிலில் விழுந்தாள்.

''ச்சே...'' என்றவன் வெளியே போய் விட்டான். அவன் திரும்பி வந்து பார்க்கும் போது அவள் தன் கையில் கத்தியால் கிழித்துக் கொண்டிருந்தாள்.

''அடிப்பாவி... என்ன காரியம் செய்கிற...''

அவன் அவசரமாய் கத்தியைப் பிடுங்கிப் போட்டான். அவள் கையின் ரத்தப் பெருக்கு நிறக கட்டுப் போட்டு விட்டான். மருமகளைக் காணோம் என்று தேடி வந்த தாயிடம் அவளுக்கு தலைவலி என்று சொன்னான். தமிழ்செல்வி போனதும்... கதவைத் தாழிட்டு விட்டு... தர்ஷிணியின் அருகில் அமர்ந்தான்.

''தர்ஷிணி...''

''...''

''என்னைப்பார்...''

அவள் அவனைத் திரும்பிப் பார்க்கவில்லை. கண்ணுக்கு முன்னால் தெரிந்த சூனிய வெளியை வெறித்துக் கொண்டிருந்தாள்.

## 15

அர்ஜுன் அவளை நெருங்கி அணைத்தான். அவள் விடுபட முயன்றாள். அவன் விடவில்லை. அவளது இடுப்பில் கைகொடுத்து அவளைத் தூக்கிக் கொண்டு கட்டிலை அடைந்தான்.

''விடுங்க என்னை...''

''விட முடியாது... இப்போது மட்டுமில்லை... எப்போதுமே...''

''நீங்கள் மாளவிகாவைக் கல்யாணம் பண்ணிக் கொள்ளுங்கள்...''

''நீ யாரைக் கல்யாணம் பண்ணிக் கொள்ளப் போகிறாய்?''

''அசிங்கமாகப் பேசாதீர்கள்...''

''நீயும் அப்படிப் பேசாதே...''

''நான் வேறு என்னதான் செய்வது?''

''நான் சொல்லவா...?''

அவன் குனிந்து அவளின் காதருகே முணுமுணுத்தான்... அவள் கிளர்ந்து சரிந்தாள். அவன் அவள் மேல் படர்ந்தான்.

கோவாவில் தடைபட்டதை... தன் வீட்டில் தடை இல்லாமல் பெற்றுக் கொண்டான் அர்ஜுன்.

முற்றும்.

**உ.பெ.யோ.சங்கம்... அது என்ன 143?**

**விடை:** 'ஒன் ஹண்ட்ரட் அண்ட் ஃபார்ட்டி த்ரீ' - எங்க பள்ளியில் இப்படித்தான் சொல்லி கொடுத்தாங்க.